
# நிலா

இருமாத இதழ்
இலவச வெளியீடு
5000 பிரதிகள்

பங்குனி - சித்திரை 2016 நிலா | சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு | இல. 38







# 21ம் நூற்றாண்டுக்கான தொழிலாளர் நெறிமுறை மாற்றங்கள்!

# வீதியில் இறங்கிப் போராடும் மாணவர்கள்!

தொழிலாளர்களுக்கான நெறிமுறைகள், சட்டதிட்டங்கள் எனத் தன்னகம் கொண்ட Code du travail எனும் எழுத்துருச்சட்டம் பிரான்சில் 1896ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு 1910ம் ஆண்டு சட்டமூலமாக்கப்பட்டது. தொடர்ந்து காலங்களுக்கு ஏற்ப பல மாற்றங்களைக் கண்டுவந்திருந்தாலும் இம்முறை தொழிற்துறை அமைச்சர் Myriam El Khomri யினால் மாற்றி எழுதப்பட்டுள்ள பல சீர்திருத்தங்கள் Loi El Khomri என சட்டமூலமாகவுள்ளன. இது 21ம் நூற்றாண்டுக்கான தொழிலாளர் நெறிமுறை சீர்திருத்தங்கள் என அதிபராலும் பிரதமராலும் வழிமொழியப்பட்டுள்ளது.

தொடர்ந்து பலதரப்பட்ட சிக்கல்களில் காட்டமான விமர்சனங்களுக்கு உள்ளாகி வரும் சோசலிச அரசு மீண்டும் ஒரு முறை மக்களின் கோபத்துக்கு இலக்காகியுள்ளது. Myriam El Khomri யினால் எழுதப்பட்டுள்ள இம் மாற்றங்களில் பெரும்பான்மையானவை தொழிலாளர்களுக்கு பாதுகாப்பற்றவையாகவுள்ளன எனப் பெரும்பாலான பிரான்ஸ் மக்களால் கருதப்பட்டுள்ளது. இணையவழி எதிர்ப்பு மனு ஒரு மில்லியனுக்கும் அதிகமான கையொப்பங்களைப் பதிவு செய்துள்ளது. மேலும் இளைஞர்கள் குறிப்பாக மாணவர்கள் தமது எதிர்ப்பைக் கடுமையாக வெளிப்படுத்தியுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆனால், அரசுதரப்பில் தொழிற்துறை அமைச்சரும், பிரதமர் மனுவல் வால்சும் தமது நிலைப்பாட்டில் உறுதியாகவே உள்ளனர். தற்பொழுது ஏற்படுத்தப்பட்டுள்ள இம் மாற்றங்களால் பெரிதும் பலனடையவுள்ளவர்கள் வருங்காலத் தொழிலாளர்களான இன்றைய மாணவர்களே என்கிறார் பிரதமர் மனுவல் வால்ஸ். மேலும், மக்களின் ஐயப்பாடுகளும், கேள்விகளும், சந்தேகங்களும் எமக்குப் புரியாமல் இல்லை. இக்காரணங்களாலேயே நாம் தற்போது விரிவான திறந்த பேச்சுவார்த்தைகளை முதலாளிகள், தொழிற்சங்கங்கள், மாணவ அமைப்புகள் என அனைத்து சாராருடனும் நடத்தியுள்ளோம். பேச்சுவார்த்தைகளில் எமக்குச் சுட்டிக் காட்டப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்ய பல மாற்றங்களை மாற்றி எழுதியுமுள்ளோம் எனவும், இத்திட்டத்தை அமைச்சரவை விவாதத்துக்கு கொண்டு வருவதற்கான காலத்தையும்

(2ம் பக்கம் பார்க்க..)


நிலா
www.nilafrance.com

தொடர்புகளுக்கு : சங்கீதா அச்சகம்
Tél: 01 44 72 08 94
sangeethafrance@gmail.com

## Myriam El khomri (வயது 38)



பிரான்ஸ் தாயாருக்கும் மொறோக்கோ தந்தைக்கும் மொறோக்கோவில் பிறந்த இவர் சிறிது காலங்களில் பிரான்சுக்குத் திரும்பி போர்தோ நகரில் வாழ்ந்தார். பொதுவுடமைச் சட்டப் பட்டதாரியான Myriam ன் முக்கிய குறிக்கோள் நடிகை யாவதாகவே இருந்தது.

தனது 20வது வயதில் எதேச்சையாக தற்போதைய பாராளுமன்ற சபாநாயகரான Claude Bartolone ன் பயிற்சி குழுவில் இணைந்து கொண்டார். Claude Bartolone அப்போது பாரிஸ் நகர அமைச்சராகத் தலைமையிலிருந்தார். Myriam El khomri சிறப்பான செயற்பாடுகளாலும் பணி மேலான அர்ப்பணிப்பாலும் சிறிது காலங்களிலேயே பாரிஸ் 18 நகரபிதா Annick Lepetit ன் வலதுகரமாக மாறினார். பின்னர் அவரின் அரசியற்செயற்பாடுகள் பாரிஸ் முன்னாள் நகரபிதா Bertrand Delanoë யுடனும் பின்னர் Anne Hidalgo வுடனும் தொடர்ந்தது. இந்நிலையில் 2014 ஆகஸ்ட் மாதம் அதிபர் ஹொலந்தின் நேரடி தொலைபேசி அழைப்பில் நகர்ப்புற அரச மாநிலச்செயலாளரானார். மீண்டும் 2015 செப்டெம்பர் அதிபரின் நேரடி அழைப்பில் தொழிற்துறை அமைச்சரானார். இன்று அமைச்சரின் பெயர் சுமந்த புதிய சட்டமூலம் விவாதத்தில் உள்ளது. தொழிற்துறை அமைச்சர் எனப் பொத்தம் பொதுவாகச் சொன்னாலும் தொழிற்துறை, வேலைவாய்ப்பு, தொழிற்பயிற்சி மற்றும் சமூக உரையாடல் எனMyriam El khomri இன் துறை நீளமானது.

பதவிக்கு வந்த ஒரு சில மாதங்களிலேயே தொழிலாளர் நெறிமுறை மாற்றங்கள் (Code du travail ) அமைச்சர் மீது பெருஞ்சுமையாக இறங்கியுள்ளது. அவரின் பணி நேர்த்தியும், புதிய புதிய சிந்தனைகளும் ஒரு தொழிலாள மத்தியதர வர்க்கக் குடும்பப் பின்னணியும், அதிபரினதும், பிரதமர் மனுவல் வால்சினதும் ஆதரவும் அவருக்கு சாதகமான பக்கங்களாக இருப்பினும் அனுபவமின்மை என்பது பலவீனமாகவே அரசியலாளர்களால் அவதானிக்கப்படுகின்றது.

இன்னும் 15 நாட்கள் நீடித்துள்ளதுடன் நாம் உரையாடல்களுக்கு தயாராக வேயுள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

– தொழிற்சங்க அமைப்புகளில் Fo (Force ouvrier), CGT (Confédération générale du travail) ஆகியவை பேச்சுவார்த்தைகளுக்கே இடமில்லை என மறுப்புத் தெரிவித்துள்ளன.

– Medef (Mouvement des entreprises de France), ஏற்படுத்தியுள்ள மாற்றங்களில் அரசை உறுதியாக இருக்கவும், மாற்றங்களை அவற்றின் திறன்கள் மாறாமல் அமுல்ப்படுத்தவும் கோரியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது

– சீர்திருத்தங்களை முன்வைத்தவர்களும் அதை எதிர்த்து நிற்பவர்களும் விட்டுக்கொடுத்து சரியான முடிவுகளை எடுக்க வேண்டும். இல்லாத பட்சத்தில் இத்தகைய தொலைநோக்குப் பார்வை கொண்ட திட்டம் வீணடிக்கப்பட்டுவிடும் என்பது திட்டத்தை ஆதரிக்கும் ஏனைய அமைச்சர்களின் கருத்தாக உள்ளது.

இங்கு எந்தவித விட்டுக்கொடுத்தலுக்கும் முன்வராமல் இத்திட்டத்தைக் கடுமையாக எதிர்த்து நிற்பவர்கள் மாணவர்களே. மாணவ பிரதி நிதிகளுடன் தொழிற்துறை அமைச்சர், பொருளாதார அமைச்சர், மற்றும் பிரதமர் நேரடியாக மேற்கொண்ட பலமணிநேரப் பேச்சுவார்த்தைகள் எந்தவிதப்பலனையும் அளிக்கவில்லை. மாணவ அமைப்புகள் தொடர்ந்து Lycées களை முடக்கவும் அனைத்து மாணவர்களையும் வீதியில் இறக்கவும் அறைகூவல் விடுத்து வருகின்றன. நிலைமை இவ்வாறு தொடர்ந்தால் Mariage pour tous காலகட்ட எதிர்ப்புப் பேரணிகளைப் போன்று பெரும்பான்மை மக்கள் வீதியில் இறங்குவார்கள் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

தற்போது தொடர்ந்த விவாதங்களைத் தொடர்ந்து தொழிற்துறை அமைச்சர் Myriam El Khomri ஏற்படுத்திய மாற்றங்களில் பல அதிபரால் மீள் ஆய்வு செய்யப்பட்டு ஒரு சில விட்டுக்கொடுப்புகளுடன் திருத்தி எழுதப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் Myriam El Khomri - 2 சகல தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்படுமா என்பதும் கேள்விக்குறிதான். ❍

### 91 ஆவது வயதில் PhD பட்டம் வென்ற பிரெஞ்சு மூதாட்டி!



Colette Bourlier என்ற பிரான்ஸ் மூதாட்டி தனது 91 ஆவது வயதில் PhD பட்டத்தைப் பெற்றுள்ளார். இவரே பிரான்ஸில் அதிகூடிய வயதில் PhD பட்டத்தைப் பெறும் பெண்ணாகியுள்ளார். ஆய்வுக்கட்டுரை எழுத தொடங்கி 30 ஆண்டுகளின் பின்னர் Franche-Comté பல்கலைக் கழகத்தில் அதை சமர்ப்பித்துள்ளார்.

குடியேறிய தொழிலாளர்கள் தொடர்பில் இவர் சமர்ப்பித்த ஆய்வுக் கட்டுரைக்கு “high distinction” வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.




சங்கீதா அச்சகம்
39, Bd. de la Chapelle
75010 Paris
M°: La Chapelle
Gare du Nord
sangeethafrance@gmail.com
Tél. / Fax :
01.44.72.08.94

## வேலை வாய்ப்பைக் கெடுக்கும் அதிக எடை!



பிரான்சில் எடை கூடிய பெண்கள் தாங்கள் வேலையொன்றைப் பெற 8 மடங்கு பாரபட்சங்களை எதிர்நோக்குவதாக கவலை தெரிவிக்கின்றனர். பிரான்சில் வேலையற்று இருப்போரில் 33 வீதமானவர்கள் பொதுவாகத் தாங்கள் வேலையொன்றைப் பெற முடியாமைக்கு தங்கள் உடல் எடை அதிகமே காரணம் என நம்புகின்றனர்.
29 வீதமான பெண்களும், 20 வீதமான ஆண்களும் தாம் வேலையற்று இருப்பதற்கு தமது தோற்றமே தடையாக கருதுகின்றனர்.
மேலும், தங்கள் உடை தலை சீவும் முறை மற்றும் பச்சை குத்தியிருத்தல் போன்ற காரணிகளும் தமக்கு எதிராக இருப்பதாக 25வீதமானோர் நம்புகின்றனர்.

**பணம் சம்பாதிக்க, நல்லவர் கெட்டவர் எல்லோராலும் முடியும்...**
**மனிதர்களைச் சம்பாதிக்க நல்ல மனசுள்ள மனிதரால் மட்டும்தான் முடியும்!**



## சூடான குளிர்காலம்

இந்த நூற்றாண்டின் சூடான குளிர்காலமாக கடந்த ஆண்டு பதிவாகியிருக்கிறது!
பாரிசில் ஆங்காங்கே சிறிய பனிப் பொழிவுமட்டுமே இடம்பெற்றது. ஆனால் எல்லோராலும் உணரப்பட்ட உண்மையையே புள்ளிவிபரங்களும் சுட்டிக்காட்டுகின்றன.
2015/16 குளிர்காலத்தில் நம்பமுடியாத அளவுக்கு மிதமான குளிரே உணரப்பட்டுள்ளது. சராசரியாக இந்தப் பருவநிலையில் இருக்க வேண்டிய காலநிலை அளவைவிட 2.6°C உயர்வாகக் காணப்பட்டுள்ளது. டிசம்பர், ஜனவரி மாதங்களில் சராசரியாக 8 °C வெப்பநிலை நிலவியுள்ளது.

PARIS
Ville candidate
Jeux Olympiques de 2024

## பாரிஸின் ஒலிம்பிக் இலச்சினை

2024ஆம் ஆண்டின் ஒலிம்பிக் போட்டிக்கான இலச்சினையை பிரான்ஸ் வெளியிட்டுள்ளது. புகழ்மிக்க Arc de Triomphe இல் பாரிஸ் மாநகர அதிபரால் வெளியிடப்பட்டுள்ளது.

வெளியிட்டு சில மணித்தியாலங்களிலேயே சர்ச்சைகளும் எழுந்துவிட்டன. கிட்டத்தட்ட பிரித்தானிய விளையாட்டு ஆலோசனை நிறுவனத்தின் இலட்சினை போன்று அமைந்திருப்பதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.
இந்தப் பாரிஸ் இலச்சினை Dragon Rouge என்ற பிரான்ஸ் நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்டது. இரு இலச்சினைக்கு மிடையிலான தொடர்பைப் பார்த்து தான் "மிகவும் ஆச்சரியம்" அடைந்துள்ளதாக இலச்சினை உருவாக்க இயக்குனர் தனது உணர்வை வெளிப்படுத்தியுள்ளார். இது தொடர்பாக பிரித்தானிய நிறுவனத்துடன் தங்களுக்கு கூட்டு ஒப்பந்தம் எதுவும் இல்லை எனவும், அதைப்போன்று செய்யவேண்டும் என்ற நோக்கம் எதுவும் தமக்கு இருக்கவில்லை எனவும் சட்ட ரீதியாக இது பரிசீலிக்கப்பட்டது" எனவும் அவர் மேலும் ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

இந்தக் கோடைகாலம் தொடக்கம் பாரிஸைச் சூழவுள்ள பகுதிகளில் மின்சாரத்தில் இயங்கும் ஸ்கூட்டர்களை வாடகைக்குப் பெறமுடியும் என மேஜர் அலுவலகம் அறிவித்துள்ளது.

நகரின் மையப் பகுதியில் வரும் கோடை காலத்தில் 1000 மின் ஸ்கூட்டர்களை வாடகைக்குப் பெறலாம். ஐரோப்பாவிலேயே சுயசேவை ஸ்கூட்டர்களை வழங்கும் முதலாவது நிறுவனமான Cityscoot என்ற நிறுவனத்தாலேயே இந்தத் திட்டம் நிர்வகிக்கப்படவுள்ளது.

1200 பேரால் 4500 பிரயாணங்கள் மேற்கொள்ளப்பட்டு பரீட்சித்துப்பார்க்கப்பட்டது. அதில் 65 வீதமானவர்கள் இந்த சேவையை தொடர்ந்து பயன்படுத்த விரும்புவதாகத் தெரிவித்துள்ளனர். இதற்காக கடந்த யூன் மாதத்திலிருந்து 50 ஸ்கூட்டர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

சூழல் மாசடைவதைத் தடுக்கவும், வாகன நெரிசலைத் தடுக்கவும் இது பெரிதும் உதவும் என நம்பப்படுகின்றது.





Nicholas Hoult

# அமைச்சரவை மாற்றங்கள்

**2016 ஆரம்பமே** பிரான்ஸ் அரசியல் பரப்பில் எதிர்பார்ப்புக்களை மீறிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. சோசலிச அரசின் முக்கிய ஆளுமைகளில் ஒருவரான நீதித்துறை அமைச்சர் Christiane Taubira வின் ராஜினாமா முதல் அடியாக இறங்கியது.

தொடர்ந்து பிரதமர் மனுவல் வால்சின் அரசாங்க அமைச்சர்கள் மாற்றியமைக்கப்பட்டு புதிய அரசு தற்பொழுது களமிறங்கியுள்ளது.

இன்னும் 15 மாதங்களில் நடக்கவிருக்கும் அதிபர் தேர்தலும் தற்போதைய ஆட்சியாளர்களின்மேல் மக்கள் கொண்டுள்ள விரக்தியும் புதிய அமைச்சரவை மாற்றங்களைச் சாத்தியப்படுத்தியுள்ளன.

ஐந்தாண்டுகால ஆட்சியின் இறுதிக் காலத்தில் இருக்கும் அரசு இவ் அமைச்சரவை மாற்றங்களால் எவ்விதமான மாற்றங்களையும் ஏற்படுத்திவிட முடியாது என்பதும் இது தற்போதைய ஆட்சியாளர்களின் வெறும் கண்துடைப்பு என்பதும் பெரும்பான்மை மக்களின் கருத்தாகப் பதிவாகியுள்ளது. அத்தோடு ஆளும் சோசலிசக் கட்சி தனது உட்கட்சி ஆதரவுகளையும் இழந்துவருவதும் குறிப்பிடத்தக்கது.

விமர்சனங்களுக்குப் பதிலளித்த பிரதமர் மனுவல் வால்ஸ் தற்போது எனது கவலையெல்லாம் சோசலிசக் கட்சியின் எதிர்காலம் குறித்து அல்ல மாறாக பிரான்ஸ் மக்களின் எதிர்காலம் குறித்ததே எனத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அதிபரும் இன்றைய திகதியில் பிரான்ஸ் மக்களின் பாதுகாப்பு, வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு ஆகியவையே பிரான்ஸ் அரசின் மூன்று முக்கிய முன்னுரிமைகளாகும் எனவும் சீர்திருத்தங்களை முன்வைத்து அவற்றை முன்னகர்த்திச் செயற்படுத்தும் அரசாக புதிய அரசாங்கம் செயற்படும் எனவும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## புதிய வரவுகளும் வெளியேற்றங்களும்



Barbara Pompili

முக்கிய மீள்வருகை, முன்னாள் பிரதமரும் அதிபரின் அரசியல் நலன்விரும்பியுமான Jean-Marc Ayrault தற்போது வெளிவிவகாரத்துறை அமைச்சராகப் பதவியேற்றுள்ளார். இதுவரை இந்தப் பதவியை வகித்து வந்த Laurent Fabius தற்போது அரசியலமைப்புச் சட்ட ஆலோசனைக் குழுத் தலைவராக இடம்மாறியுள்ளார்.



Jean-Vincent Placé



Emmanuelle Cosse

2014 பங்குனி மாதத்தோடு பல்வேறு அரசியற் கருத்து வேறுபாடுகளால் அமைச்சரவையிலிருந்து முற்றிலுமாக வெளியேறியிருந்த பசுமைக் கட்சியினர் மீண்டும் அரசில் இணைக்கப்பட்டுள்ளனர். Emmanuelle Cosse வீட்டுவாரியத் துறைக்கும் Jean-Vincent Placé அரச சீர்திருத்த செயலாளராகவும் Barbara Pompili உயி ரியற் பல்வகைமை (Biodiversité) துறைச் செயலாளராகவும் நியமனம் பெற்றுள்ளனர்.

Laurent Fabius தவிர்த்து கலாச்சாரத் துறை அமைச்சர் Fleur Pellerin, வீட்டுவாரியத் துறை அமைச்சர் Sylvia Pinel, பொதுச்சேவைப் பரவலாக்கத்துறை அமைச்சர் Marylise Lebranchu ஆகியோர் வெளியேற்றப்பட்டு புதிய அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அமைச்சரவையில் இணைய விடுக்கப்பட்ட கோரிக்கையை சுற்றுச்சூழல் செயற்பாட்டாளரும் அதிபர் பிரான்சுவா ஹொலந்தின் பிரத்தியேக சுற்றுச்சூழல் தொடர் ஆலோசகருமான Nicholas Hoult நிராகரித்துள்ளார்.

நான் அரசாங்கத்தில் பல கட்டுப்பாடுகளுடன் செயற்படுவதை விட ஒரு சமூக செயற்பாட்டாளராக வெளியிலிருந்து செயற்படுவதையே விரும்புகின்றேன் என அவர் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.



## வேலைவாய்ப்பை அழிக்கும் 'றோபோக்கள்'

**எதிர்காலத்தில் றோபோக்கள்** 42 வீதமான தொழில்களை பிரான்சில் கையில் எடுக்க உள்ளன. அமெரிக்காவின் ரெக்சாஸ் மாநிலத்தின் தகவல் தொழில்நுட்ப நிறுவன (Institute for Information Technology) தகவலின்படி எதிர்காலத்தில் உலகின் அரைப்பங்கு வேலைகள் மனிதர்களிடம் இருந்து றோபோக்களால் பறிக்கப்பட்டுவிடும்.

பிரான்சிலும் Cabinet Roland Berger என்ற நிறுவனம் 2014ம் ஆண்டு மேற்கொண்ட ஆய்வின்படி 2025ம் ஆண்டில் 42 வீதமான தொழிற்துறைகளில் றோபோக்களின் ஆதிக்கம் இருக்கும் என எச்சரிக்கின்றது. இதன்மூலம் 30 இலட்சம் பிரான்ஸ் மக்கள் வேலையற்றவர்களாகிவிடுவர்.

தற்போது மனிதர்கள் செய்யும் வேலைகளை றோபோக்கள் கையெடுக்கும்போது ஏற்படும் பின்விளைவுகள் எப்படி இருக்கும் என உறுதியாக சொல்லமுடியாவிட்டாலும் றோபோக்களின் ஆதிக்கம் பலமாக இருக்கும் என உறுதிபடத் தெரிவிக்கப்படுகின்றது.


மண்டைதீவு திருவெண்காடு
சித்திவிநாயகர்
ஆலய இணைய முகவரி
www.thiruvenkadumandaitivu.com

தமிழ் ஒலி
உலக தமிழர்களை ஒன்றிணைக்கும் வானொலி

Eurobird-9A
TRT Tamil oli Frequancy: 11919
Polarizakion vertical
symbol rate : 27500 Fec 3/4

Tel (office) : 0033 148371675
Fax : 0033 148450956
For Live Programs: 0033 148321540
Skype : trttamil
Mail : trtnews@hotmail.fr
Website: http://www.trttamilolli.com/




இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு


காந்தி
Wedding Hall
: sallemaelys
15, Rue de la Longueraie
91270 Vigneux-sur-seine
(Villeneuve-Saint-Georges - RER D)
திருமண மண்டபம்
200 இருக்கைகள், 300 இருக்கைகள்கொண்ட 2 மண்டபங்கள்
மண்டப அலங்காரம்,
சாப்பாடு
மற்றும்
அனைத்து
சேவைகளும்
ஒரே இடத்தில்...
தொடர்புகளுக்கு : குரு
Tél : 06 51 13 67 17

# பிரான்ஸ் பொலிஸ்சேவையில் இணைய இளைஞர் ஆர்வம்!





13 நவம்பர் 2015ல் பாரிசில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலில் 130 பேர் கொல்லப்பட்டு 400 பேர் வரை காயம் அடைந்தனர். இதன் பின்னர் 2800 பொலிசாரை சேவை யில் சேர்க்க விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது 35673 பேர் பொலிஸ் சேவையில் இணைய விரும்புவதாக விண்ணப்பித்திருந்தனர். பயங்கரவாதத்தாக்குதல் இடம்பெற்று நான்கு மாதங்களிற்குள் நாட்டின் பொதுப் பாதுகாப்புச் சேவையில் இணைய பெருமளவில் இளைஞர்கள் முன்வந்து விண்ணப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பொலிஸ் சேவையில் இணைய பிரான்சில் அதிகளவானோர் முன்வந்துள்ளமை தற்போதே நடந்துள்ளதாக பொலிஸ் பிரிவு மகிழ்ச்சி தெரிவித்துள்ளது. நாட்டின் 83 வீதமான மக்கள் பொலிசாரை விரும்புவதாக அண்மைய (Odoxa) கருத்துக்கணிப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

பொலிஸ் சேவையில் இணையத் தேவையான நிபந்தனைகள்:–

- பிரஜா உரிமை : போட்டி மூலம் தேர்ந்தெடுக்கப்பட உள்ள பொலிசார் பிரெஞ்சுப் பிரஜா உரிமை உடையவர்களாக இருக்க வேண்டும்.
- ஜனவரி 1ம் திகதி 17 வயதிற்கு மேற்பட்டவர்களாகவும், 35 வயதிற்கு குறைந்தவர்களாகவும் இருக்க வேண்டும்.
- பொலிஸ் சேவையில் இணைபவர் எவ்வித குற்றப்பின்னணியும் அற்றவராக இருத்தல் அவசியம்
- BAC பரீட்சையில் சித்திபெற்று இருக்க வேண்டும் அல்லது இதை ஒத்த கல்வித்தரம் ஒன்று வெளிநாட்டில் இருக்க வேண்டும்.
- சேவையில் இணைபவர் மருத்துவப் பரிசோதனையில் தகுதி (Apte) உள்ளவராக இருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரரின் கண்பார்வை, கண்ணாடி பாவிப்பவராயின் இருகண்களால் பார்க்கும் போது 15 இற்கு 10 பார்வைத் தெளிவு இருக்கும் போது தனித்தனியாக ஒவ்வொரு கண்ணின் பார்வை குறைந்தது 10 இற்கு 5 என இருத்தல் வேண்டும்.




சிரிக்கும்போது வாழ்க்கையை ரசிக்க முடியும் – ஆனால் அழும்போதுதான் வாழ்க்கையை புரிந்துகொள்ளமுடியும்.



Association Sociale Internationale - France
சர்வதேச சமூக உதவிச் சங்கம் - பிரான்ஸ்
இலவச ஆலோசனையுடன் பிரான்சில்
உங்கள் அனைத்துவிதமான நிர்வாக அலுவல்களுக்கும்
தொடர்பு கொள்ளுங்கள்!
06.20.43.61.42 web : www.asif-in.fr

D.J
உங்கள் வைபவங்களுக்கு அழைத்து மகிழுங்கள்!
நாடக விழாக்களுக்குத் தேவையான நுண்ஒலிஅமைப்பு உதவிகளும் செய்துதரப்படும்!
Ranjan 06.13.37.10.84 Siva 06.52.93.28.27

• இப்படியும் நடக்கிறது!



## சம்பள உயர்வால் அதிர்ச்சியடைந்துள்ள மாநகரசபைத் தலைவர்!

வாழ்க்கைக்கு தேவையற்ற தேவைகளை அதிகரித்து வாழ்க்கைச் செலவீனங் களைக் கட்டுப்படுத்த முடியாமலும் அதற்கான வருமானத்தை அதிகரிக்க முடியாமலும் திண்டாடும் நிலையில் இப்படியும் நடக்கின்றது.

தனது விருப்பத்திற்கு மாறாக இரண்டு மடங்கு சம்பளத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என கூறும் புதிய சட்டத்தால் பிரான்ஸ் மாநகரசபைத்தலைவர் ஒருவர் விரக்தி யடைந்துள்ளார்.

பிரான்சின் தென்மேற்குப் பகுதி யில் கிட்டத்தட்ட 500 பேர் வாழும் கிராமம் Saint-Aubin. 2014இல் இங்கு சோசலிசக்கட்சி சார்பில் மாநகரசபைத் தலைவராக தெரிவுசெய்யப்பட்ட Stéphane Delpeyrat தொடர்ந்து அந்தக் கிராம மக்களுக்கு முன்னுதாரணமாக திகழ விரும்பினார்.

வழமையாக பிரான்ஸின் சிறிய கிராமங்களுக்கான மாநகரசபைத் தலைவர்கள் 1178யூரோ வரை சம்பாதிக்கலாம். பிரான்ஸ், பொருளாதார நெருக்கடி நிலைமை யாலும் கடனாலும் அவதிப்படும் நிலையில் Delpeyrat தனது மாதச் சம்பளத்தை 400 யூரோவாகக் குறைக்க முடிவெடுத்து அதை மேலதிகாரி களுக்கும் தெரியப்படுத்தினார்.

கிடைத்ததோ துயரச் செய்தி. இவரது வழமையான சம்பளம் அதிகரிப்பதாக கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இவ்வாறு அவரது கடமைக்காக வழங்கப்படும் ஊதியத்தை மறுத்து சிறு தொகையை மட்டும் வீட்டுக்குக் கொண்டு செல்வது சட்டத்தை மீறும் செயல் எனவும் அவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

"இது ஒரு கோரமான சம்பவம். நான் மக்களுக்கு ஒரு உதாரணமாக இருக்க விரும்பினேன்" என ஊடகங்களுக்கு அவர் கவலை தெரிவித்துள்ளார்.

நாடெங்கிலும் உள்ள பல ஆயிரக்கணக்கான கிராமங்களில் உள்ளூர் மக்கள் மாநகரசபைத் தேர்தலில் நிற்பதை ஊக்குவிப்பதே இந்த புதிய சட்டத்தின் நோக்கம் என அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.




39 Boulevard de la Chapelle, 75010 Paris 01 44 72 08 94

# அடையாள அட்டைப் பரிசோதனை
## ஒவ்வொரு சோதனைக்கும் ரசீது

**தீவிரவாதக் குற்றச்சாட்டு** அல்லது வேறு குற்றச்சாட்டுக்களில் ஈடுபட்டு அல்லது அவ்வாறு சந்தேகிக்கப்பட்டு தேடுவோர் பட்டியலில் இடம்பெற்றுள்ளோர் எண்ணிக்கை தற்பொழுது அதிகரித்தேயுள்ளது.

இவ்வாறு தேடப்படுவோரின் முகச் சாயல் ஒன்றாக இருப்பதாகக் கூறி இளைஞர்கள் மீது பாரபட்சமான அடையாள அட்டைப் பரிசோதனைகள் இடம்பெறுவதாக பரவலான குற்றச்சாட்டுக்கள் பிரான்ஸ் நாட்டு மக்களால் தொடர்ந்து முன்வைக்கப்படுகின்றன.

2012 ஜனாதிபதித் தேர்தலின் போது இவ்வாறான பாரபட்சமான அடையாள அட்டைப் பரிசோதனைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்படும் என பிரான்சுவா ஹொலந்த் வாக்குறுதி அளித்திருந்தார். ஆனால் ஆண்டுகள் போனதேயொழிய மாற்றம் ஏதும் வரவில்லை.



ஒருவர் மீண்டும் மீண்டும் சோதனைக்கு உட்படுத்தப்படுவதைத் தடுக்கும் வகையில் ஒரு முறை சோதனைக்கு உட்படுத்தப்பட்டால் அது பற்றிய பற்றுச்சீட்டை பொலிஸ் வழங்கும் எனவும் பிரான்சுவா ஹொலந் உறுதியளித்தார்.

கட்டாயமாக சோதனையின் போது பற்றுச்சீட்டு வழங்கப்படவேண்டும் என்ற தீர்மானத்தை பாரிஸ் 12 மாநகர சபை தற்போது நிறைவேற்றியுள்ளது. பாரிஸில் வசிக்கும் 16 இளைஞர்கள் ஒன்றிணைந்து இவ்வாறான தொடர் சோதனை குறித்து பொலிசார் மீது வைத்த குற்றச்சாட்டின் பின்னரே இந்த நடைமுறை தற்போது அங்கு நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்த பிரான்சிலும் இந்த நடைமுறை கொண்டுவரப்படும் என்ற ஜனாதிபதி பிரான்சுவா ஹொலந்தின் வாக்குறுதி இன்னமும் கிடப்பிலேயே உள்ளது.

இதைவிட வெளிநாட்டவர்களின் பிள்ளைகள் மீதே கூடுதலான பாரபட்சம் காட்டப்படுவதாகவும் அதிகாரதுஷ்பிரயோகம் செய்யப்படுவதாகவும்கூட விசனம் தெரிவிக்கப்படுகின்றது.







பாரிஸ் லாச்சப்பலில்

# கோபால் அன் கோ

# GOPAL & CO

இலங்கை இந்தியாவிற்கு
மிகக் குறைந்த விலையில்
கதைப்பதற்கு Kish Mobile!




வாடிக்கையாளர் வசதி கருதி ....

**லாச்சப்பலில்...**
72, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle

**பொபினியில்...**
205, AV. JEAN JAURES,
93000 BOBIGNY.
Tram 1: La Ferme

**Tél : 09 51 56 76 52 Fax : 01 46 07 13 03**

ஓம் சக்தி







லாச்சப்பல்

# ஸ்ரீ பத்திரகாளியம்மா - பிரான்ஸ்

# குடமுழுக்கு விஞ்ஞாபனம்

## 01.05.2016

**மெய் அடியார்களே !**

பத்திரகாளியம்மா பக்தர்களின் பேராதரவில் சிவாகம முறைப்படி புதிதாக அமைக்கப்பட்ட ஆலயத்தில் இந்தியாவின் மாமல்லபுரத்திலிருந்து தருவிக்கப்பட்ட மகிமைமிகு அம்மன் திருவுருவச்சிலை எதிர் வரும் 01.05.2016 அன்று ஆகமமுறைப்படி திருக்கண் திறப்புச் செய்யப்பட்டு பிரதிஸ்டை செய்வதற்கு திருவருள் கைகூடி உள்ளது.


அத்துடன் வைகாசி 1ம், 2ம், 3ம் திகதிகளில் எண்ணெய்க்காப்பு சாத்துதல் நிகழ்த்தப்பட்டு, 04.05.2016 மண்டலாபிசேகம் ஆரம்பமாகும் என்பதையும் அடியார்களுக்குத் தெரியப்படுத்துவதோடு மேற் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் காலை 10 மணி தொடக்கம் மாலை 8 மணி வரை எண்ணைய்க் காப்பு சாத்தலாம் என்பதையும் அறியத்தருகிறோம்.

பிரதம குரு :

**சிவஸ்ரீ சிவாகம ஞானபானு சிவஸ்ரீ சிவபாலேந்திரக்குருக்கள்**

நிர்வாகம் :

**ஸ்ரீ ஸ்ரீ மகேந்திரசுவாமி**




**Sri Pathirakali Amma Temple**
**21, Bd de La Chapelle 75010 Paris**
**Tel : 09 54 27 99 88**




# 'பெயரற்ற மனிதனின் உண்மைக் கதை'

**அடிமைகளின் மகனாகவும்** பாரிஸ் நகரவாசிகளால் மிகவும் நேசிக்கப்பட்டவருமான ஒருமனிதனை நீண்ட காலமாக உலகம் மறந்தேயிருந்தது. அவர் தான் 'Chocolat' என எல்லோராலும் அழைக்கப்பட்ட Rafael Padilla. பிரான்சின் முதலாவது கறுப்பின பிரபலமும் இவர் தான். இவர் இறந்து கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டு கடந்துள்ள நிலையில் எல்லோரையும் பிரமிக்க வைக்கும் வகையில் மீள நினைவு கூரப்பட்டுள்ளார். திரைப்படம், புத்தகம், கண்காட்சி, நாடகம் என இவரின் வாழ்க்கையே கதையாகியுள்ளது.

1917இல் பிரான்சின் தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ள Bordeaux மயானத்தில் இவர் புதைக்கப்பட்டபோது மிகவும் அரிதானவர்களே அறிந்திருந்தார்கள். கியூபாவில் பிறந்த, ஆபிரிக்க அடிமைகளின் மகனான இவர் ஒரு காலத்தில் பிரான்சின் பிரபலமாக இருந்தவர் என்றே சிலர் அப்போது நினைவில் வைத்திருந்தார்கள்.

ஆனால் நீண்ட காலத்திற்கு முன்னர் 'Chocolat' பிரான்சின் darling. பணக்காரர்கள், அதிகாரம் மிக்கவர்கள், ஊடகங்கள் என எல்லோராலும் நேசிக்கப்பட்டவர், கொண்டாடப்பட்டவர்.

## யார் இந்த 'CHOCOLAT'?

கிட்டத்தட்ட 1868ஆம் ஆண்டு ஹவானாவில் "பெயரில்லா மனிதனாக" பிறந்தார். 10 வயது வரைக்கும் கியூபாவிலேயே வாழ்ந்துவந்த இவர் ஸ்பானிஸ் நாட்டு வியாபாரிக்கு விற்கப்பட்டார். இவர் ஐரோப்பிய மண்ணில் கால் பதித்த காலப்பகுதியில்தான் அடிமைகளாகக் கொண்டுவரப்பட்டவர்களுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது. Rafael சுதந்திர மனிதன் ஆனார். தோட்டத் தொழிலாளியான இவர் 14 வயதில் நாடோடி போல தன் வாழ்க்கையை தொடர்ந்தார். மதுபானக் கடைகள், உணவு விடுதிகள், வீதிகளில் நடனம் ஆடுவதே இவரது பிழைப்பு ஆனது. தான் சிறு பராயத்தில் இருக்கும் போது ஹவானா துறைமுகத்தில் பார்த்த ஆபிரிக்க அடிமைகளின் செயற்பாடுகள் இவரது நடன அசைவுகளில் பிரதிபலித்தன.

மிகவும் பிரபலமாகவிருந்த பிரித்தானியாவைச் சார்ந்த கோமாளி Tony Grice இவரை ஒரு நாள் தற்செயலாக சந்தித்தார். தன்னுடன் பாரிஸ் அழைத்துவந்தார்.

அந்தக் காலத்தில் பிரான்ஸில் அபூர்வமாகவே கறுப்பினத்தவரைக் காணமுடியும். மனிதக் காட்சிச் சாலைகளில்(Human Zoo) வினோதப்பொருளாக காட்சிக்கும் இவர்கள் வைக்கப்பட்டிருந்தார்கள். Rafael விதிவிலக்கல்ல. அவரும் காட்சிப்பொருளாகவே பார்க்கப்பட்டார். ஆனால் இந்தக் "குறைபாட்டை" மிகப்பெரிய சொத்தாக்கினார் Rafael.

Nouveau Cirque எனும் அரங்கில் 3000 பார்வையாளர்கள் முன்னிலையில் Tony Grice நடித்தார். அப்போது மேடைக்கு அவரின் பொருட்களை கொண்டுசென்று வைப்பதே Rafaelக்குக் கொடுக்கப்பட்ட வேலை. அந்த சொற்ப நேரத்தை தன் திறமைகளுக்கான மிகப்பெரிய தருணம் ஆக்கினார். மெல்லிய வெளிச்சத்தில் பொருட்களைக் கொண்டுசெல்லும் போது கோமாளி நடிப்பினாலும் நடன அசைவுகளாலும் பார்வையாளர்களை தன்பால் ஈர்த்துக்கொண்டார்.

1888இல் தனது சொந்த உருவாக்கத்தில் அரங்கேற்றிய Chocolat's wedding பெரும் வெற்றியளித்தது. நடனம், பாட்டு, கோமாளி வேடம் என Chocolatஇன் புகழ் உச்சத்தைத் தொட்டது. இவரை "அரசனாக" "மேதையாக" சித்தரித்த மாபெரும் ஊடகங்கள் 'Chocolat நீண்ட காலம் வாழ்க! என கூச்சலிட்டன. மிகப் பிரபலமானவர்களால் இவர் சித்திரமாக வரையப்பட்டார். திரைப்படமாக்கப்பட்டார். புத்தகங்கள், விளம்பரங்கள், பொம்மலாட்டங்கள் என அனைத்திலுமே இவர் இடம்பிடித்தார்.

1895 – 1902 வரையான காலப்பகுதியில் பிரித்தானிய கோமாளி George Footit உடன் Chocolat இணைந்து செய்த நிகழ்வுகள் இவரது வாழ்நாளில் மிக முக்கிய புகழைச் சேர்த்த நாட்கள். வெள்ளையினக் கோமாளியும் அவரது சேவகனாக கறுப்பினக் கதாபாத்திரமும் சர்க்கஸ் வரலாற்றிலேயே ஒரு மைல் கல்லாக அமைந்தது. காலணித்துவ காலத்தில் பொதிந்திருந்த அடக்குமுறையையும் இந்தச் சோடி சித்தரித்துக்காட்டியது. அப்பாவியாக அவ்வப்போதெல்லாம் அடிவாங்கும் இவர் பாத்திரம் மக்களை மகிழ்வித்தது.

1905இன் பின்னர் அரசியலில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்தன. கறுப்பினத்தவரை வெள்ளையர் அடிப்பது போன்ற காட்சிகளை மக்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை. மக்களின் ரசனை மாறியது. இசை நடன நிகழ்ச்சிகளும், குத்துச் சண்டைப் போட்டிகளும் மக்களை ஈர்த்தன. Chocolat பிரபலமிழந்தார். வாழ்வாதாரத்திற்காக பாரிஸில் சிறுவர் வைத்தியசாலைகளில் சிரிப்பு வைத்தியத்திற்காக நிகழ்ச்சிகளை நடாத்தினார்.

மரணம் காத்திருக்க, பிரான்சின் மிகவும் நேசிக்கப்பட்ட கோமாளி 1917 நவம்பர் 3ஆம் திகதி Bordeaux இல் அமைந்துள்ள சர்க்கஸில் தனது கடைசி நிகழ்ச்சியை நடாத்தினார். மறுநாள் மாரடைப்பால் இறந்துபோனார். இங்கேயும் சோகம் காத்திருந்தது. Chocolat இன் உடல் ஏழைகளுக்காக ஒதுக்கப்பட்ட ஒரு இடுகாட்டில் புதைக்கப்பட்டது.ஆனால் இவரோடு இணைந்து மேடையேறிய வெள்ளையின கோமாளி Footit இறந்தபோது அவரது உடல் பாரிஸின் புகழ்பெற்ற Père Lachaise மயானத்தில் புதைக்கப்பட்டது.

விதியின் திருப்புமுனையாக ஒரு நூற்றாண்டு கடந்துள்ள நிலையில் இவரையே இன்று உலகம் நினைவுகூருகின்றது. பிரான்ஸ் மக்களின் Darling, ஒரு காலத்தின் கதாநாயகன், கறுப்பின தலைசிறந்த கலைஞனின் நினைவை மீட்க ஒரு நூற்றாண்டு எடுத்திருக்கின்றது என்றும் கூறலாம். அண்மையில் பிரான்ஸ் நாட்டு இயக்குனரால் ஒரு வாழ்க்கை வரலாற்றுப் படமாக "Chocolat" என்ற திரைப்படம் வெளியிடப்பட்டுள்ளது. கண்காட்சியும் நாடகமும் அரங்கேறியுள்ளது. 'Chocolat: பெயரற்ற மனிதனின் உண்மைக் கதை" என்ற பெயரில் புத்தகமும் வெளியிடப்பட்டுள்ளது. இன்று மீண்டும் பேசப்படும் மனிதனாக Chocolat.

– தேன்மொழி


இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு



# 62 வயதில் உலகம் சுற்றும் வாலிபன்

பிரான்சைச் சேர்ந்த Serge Girard, 26300 கிலோமீற்றர் தூரத்தை 400 நாட்களில் ஓடி உலகம் சுற்றி வரவுள்ளார். 62 வயதாகும் Serge Girard நாளுக்கு 65 கிலோமீட்டர் தூரம் எனத் தொடரவுள்ள ஓட்டத்தை 31 ஜனவரி 2016ல் ஈபில் கோபுரக் காலடிகளிலிருந்து ஆரம்பித்துள்ளார். உலகம் சுற்றி மீண்டும் ஈபில் கோபுரத்தை 2017ம் ஆண்டு மார்ச் மாதம் வந்தடைவார். சாதாரணமாக மரதன் ஓட்டம் என்பது 42.195 கிலோமீட்டர் எனவும், அரை மரதன் என்பது 21.097 கிலோமீற்றர் என்பதும் வரையறுக்கப்பட்ட தூரங்களாகும். Serge Girard போன்று நீண்ட தூரம் ஓடு–வதை Ultra மரதன் ஓட்டம் என அழைக்கப்படுகின்றது.

இதுவரை காலமும் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த Tom Denniss 26232 கிலோமீற்றர் தூரத்தை 622 நாட்களில் ஓடி சாதனை படைத்திருந்தார். 2011ல் ஆரம்பித்து 2013ல் முடிவுக்குவரும் போது அவரின் வயது 50 ஆகும். தற்போது Serge Girard அவரின் சாதனையை முறியடிக்கவுள்ளார். இவ்வாறு நீண்ட தூரங்களை ஓடிக்கடப்பது என்பது Serge Girard க்கு ஒன்றும் புதிதல்ல. ஐந்து கண்டங்களையும் ஓடிக்கடந்துள்ளார். நாளுக்கு 10 மணிநேரம் 70 கிலோமீற்றர் தூரத்தை ஒரு நாள் கூட ஓய்விலிருக்காமல் ஓடிக்கடப்பது என்பது இவரின் சிறப்புகளில் ஒன்றாகும்.

இம்முறை உலகச்சுற்றை ஆறு பிரிவுகளாக கடக்கவுள்ளார்.
1. பாரிஸ் லிஸ்போன் (போர்த்துக்கல் – 2283 கிலோமீற்றர்) பின்னர் விமானத்தில் மியாமிக்கு (அமெரிக்கா) பறந்து அங்கிருந்து வடமேற்கு மூலையான Anchorage (11500 கிலோமீற்றர்)
3. நியூசிலாந்து குறுக்குவெட்டாக (2100 கிலோமீற்றர்)
4. அவுஸ்திரேலியா குறுக்குவெட்டாக (4000 கிலோமீற்றர்)
5. தென்அமெரிக்கா Durban முதல் Walvis Bay (2400 கிலோமீற்றர்)
6. இஸ்தான்புல்(துருக்கி) லிருந்து – பாரிஸ் 4100 கிலோமீற்றர்

நீண்ட தூரம் என்பது கனவு காண்பவனுக்கு மட்டும் தான். கனவுகளை எட்டிப்பிடிக்க நினைப்பவனுக்கு அல்ல என்ற தத்துவமே தனது உற்சாக மந்திரமாக்கும் என Serge Girard தெரிவித்துள்ளார்.

## துளிர்விடும் பிரான்ஸ் பொருளாதாரம்




2015ஆம் ஆண்டில் பிரான்ஸின் பொருளாதாரம் 1.1வீதத்தால் உயர்ந்துள்ளது. இது கடந்த நான்கு வருடத்தில் கண்டுகொண்ட மிகப்பெரிய வளர்ச்சியாகப் பார்க்கப்படுகின்றது. பல வருடங்களாக இருந்துவரும் பொருளாதார நெருக்கடி நிலையை பார்க்கும் போது இது பெரிய மாற்றம் என அரசாங்கம் அடிக்கோடிட்டுள்ளது.
ஆண்டின் இறுதிப்பகுதியில் பயங்கரவாதத் தாக்குதல்கள் இடம்பெற்றிருந்த போதிலும் தொடர்ச்சியான பொருளாதார முன்னேற்றம் காணப்பட்டதாக நிதி அமைச்சர் Michel Sapin மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். பொருளாதார நெருக்கடியை பொறுத்தவரை "2015 மீள் எழுகைக்கான ஆண்டாக" இருந்துள்ளது. இதே போக்கு 2016இல் மேலும் வளர்ச்சி காணும் என, தான் எதிர்பார்ப்பதாக மேலும் குறிப்பிட்டுள்ளார்.






## பிரான்ஸ் : தொடரும் ஆண்-பெண் சமத்துவமின்மை



### பங்குனி 8 உலக பெண்கள் தினம்

- பிரான்சில் பெண்கள் BACபரீட்சையிலும், உயர்கல்வியிலும் ஆண்களை விட உயர்நிலையிலேயே உள்ளனர். ஆனால் வேலைவாய்ப்புகளில் பின்தங்கியவர்களாக உள்ளனர். 2013ம் ஆண்டில் BAC பரீட்சையில் பெண்கள் 93.1 வீதம் சித்தியடையும் போது ஆண்கள் 90.8 வீதத்தினரே சித்தியடைந்துள்ளனர். சித்தியடைவதில் ஆண்களை விட பெண்கள் 23 வீதம் முன்னணியில் உள்ளனர்.
- வேலை செய்யும் பெண்கள் அதே தரத்தில் உள்ள ஆண்களை விட குறைவான சம்பளத்தையே பெறுகின்றனர்.
- பகுதி நேர வேலைகட்கு தள்ளப்படுவதில் பெண்கள் தான் கூடுதலாக உள்ளனர்.
- பிரான்ஸ் பெண்கள் தங்கள் கல்வி தராதரத்திற்கும் குறைவான பணிகளிலேயே வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

மேலும் உயர்கல்வி பயில்வோர் 25 – 54 வயது காலப்பகுதியில் பெண்கள் 37,7 வீதமாக இருக்க, ஆண்கள் 31,6 வீதமாகவே உள்ளனர். பிரான்சில் பட்டப்படிப்பு பெறுவோரில் ஆண்கள் 6,1 வீதம் பின்தங்கியுள்ளனர்.

**ஏழைகளைப்பற்றி பேச பிரியப்படுகிறோம் ஆனால், ஏழைகளுடன் பேச பிரியப்படுவதில்லை என்பது என்னவோ உண்மைதான்!**





இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

# MAHAJANA Master Institute

## 2007 இலிருந்து இதுகாலவரை.....

**ஆங்கில மொழிக் கல்வியில் மிகவும்**
**பெறுமானமுள்ள வெற்றிகளைப் பெற்ற நாம்**
**தற்போது எமது கல்விநிலையத்தை**
**கணிதம் – பிரெஞ்சு – ஆங்கிலம்**
**என விரிவுபடுத்தியுள்ளோம்**



*"It's the symbol of hope for the ever evolving future for your younger generation"*

| PRIMAIRE | COLLEGE | LYCEE |
|---|---|---|
| (TOUT NIVEAU) | (TOUT NIVEAU) | (TOUT NIVEAU) |

### குறிக்கோள் *(Aim)*

- எமது மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கான தேவையை அறிந்து பிரெஞ்சு கல்வி பாடத்திட்டத்திற்கமைய வழிப்படுத்தி நற்பிரஜைகளாக்க உதவுதல்.

### எமது சிறப்பம்சங்கள்

- மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்கள்
- பிரெஞ்சு *Lycée / Collége*களில் கற்பிக்கும் *BAC+6* தகமை கொண்ட ஆசிரியர்கள்
- ஐரோப்பிய தரத்திலான நவீன வகுப்பறைகள்
- பெற்றோர்கள் மாணவர்களின் மன நிறைவு
- மாணவர்களின் தரத்திற்கமைவான வகுப்பறைத் தேர்வுகள்
- ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களை படிக்கும் பிள்ளைகளைக் கொண்டுள்ள குடும்பங்களுக்கான விஷேட கட்டணச்சலுகை
- மாணவர்களை ஊக்கப்படுத்த விஷேடமாக வடிவமைக்கப்பட்ட செயற்பாடுகள்

*இவற்றுடன் இன்னும் பல புதிய விடயங்களுடன் எதிர்காலத்தை நோக்கி.....*

..

- **COURS D'ANGLAIS** (Lundis et Mercredis)

Programmes de UNIVERSITY OF CAMBRIDGE, BRITISH COUNCIL

| | |
|---|---|
| o Starters | 7, 8 ans |
| o Movers | 9, 10, 11 ans |
| o Flyers | 12, 13 ans |
| o KET | 13 ans et plus |
| o PET | |
| o FCE | |

- **SOUTIEN SCOLAIRE** (Mercredis et Samedis)
  (Tout niveau)
  - o Niveau Primaire (CP – CM2)
  - o Niveau Collège (6ème – 3ème)
  - o Niveau Lycée (2nd – Terminale)
- **COURS DE MATHEMATIQUES** (Samedis et Dimanches)
  - o Niveau Collège (6ème – 3ème)
  - o Niveau Lycée (2nd – Terminale)
- **COURS DE FRANÇAIS** (Samedis et Dimanches)
  - o Niveau Collège (6ème – 3ème)
  - o Niveau Lycée (2nd – Terminale)
- **COURS DE DANSE – Bharathanatyam** (Samedis)
  - o Tout niveau et débutants.
- **COURS DE FRANÇAIS Pour adultes.** (Tous les jours)


**7, Rue Emile Zola,93120 La Courneuve.**
**Renseignements et Inscriptions au 06 11 68 82 50.**

RER B : (La Courneuve Aubervilliers) ல் இருந்து 5 நிமிட நடைதூரம்
Métro : (La Courneuve) ல் இருந்து பஸ் இலக்கம் 173 ஊடாக வந்து Hemet தரிப்பிடத்தில் இறங்கவும்

# துயர் பகிர்வு

வையத்துள் வாழ்வாங்கு
வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்



அமரர்
**மயில்வாகனம் பூமலர்**
(கோண்டாவில் வடக்கு)
தோற்றம் : 23. 12. 1944
மறைவு : 03 . 01. 2016



அமரர்
**நுதிகா றொபின்சன் யூட்**
(யாழ். நீர்வேலி, பிரான்ஸ்)
தோற்றம் : 22. 01.1984
மறைவு : 01. 03. 2016



அமரர்
**சூசை அலெக்ஸாண்டர்**
தோற்றம் : 24. 12. 1929
மறைவு : 21. 01. 2016



அமரர்
**சுப்பிரமணியம் நாகராஜா**
(யாழ். வசாவிளான், சுவிஸ்)
தோற்றம் : 05. 02. 1966
மறைவு : 10. 03. 2016



அமரர்
**சிவராசா சிவபாக்கியநாதன்**
(சுழிபுரம் கிழக்கு, பிரான்ஸ்)
தோற்றம் : 16. 12. 1973
மறைவு : 25. 01. 2016



அமரர்
**மயிலு சிவநாதன்**
(பருத்தித்துறை, ஜேர்மனி)
தோற்றம் : 09. 07. 1947
மறைவு : 11. 03. 2016



அமரர்
**வடிவேலு அன்னலட்சுமி**
(யாழ். வட்டுக்கோட்டை, பிரான்ஸ்)
தோற்றம் : 07. 05. 1932
மறைவு : 11. 02. 2016



அமரர்
**சுப்பையா விசுவலிங்கம்**
(யாழ். வேலணை, பிரான்ஸ்)
தோற்றம் : 15. 06. 1940
மறைவு : 09. 03. 2016



அமரர்
**சரவணமுத்து குகராஜன்**
(கைதடி நுணாவில், ஜேர்மனி)
தோற்றம் : 31. 03. 1957
மறைவு : 13. 02. 2016



அமரர்
**சங்கரப்பிள்ளை சிவாநந்தன்**
(கொல்லன்கலட்டி, மல்லாகம்)
தோற்றம் : 12. 06. 1941
மறைவு : 16. 03. 2016



அமரர்
**அலெக்ஸ்சாண்டர் அலோசியஸ்**
(பாஷையூர், நோர்வே)
தோற்றம் : 11. 09. 1940
மறைவு : 15. 02. 2016



அமரர்
**கம்பதாசன் கலாமணி**
தோற்றம் : 27. 04. 1957
மறைவு : 22. 02. 2016



அமரர்
**சிவஸ்ரீ பாலகிருஷ்ண குருக்கள்**
(யாழ். கீரிமலை, பிரான்ஸ்)
தோற்றம் : 21. 01. 1944
மறைவு : 16. 02. 2016



அமரர்
**தில்லையம்பலம் சிவநாதன்**
(முதலாம் ஆண்டு)
தோற்றம் : 07. 06. 1944
மறைவு : 18. 02. 2015



அமரர்
**பாஸ்கரன் தங்கேஸ்வரி**
(யாழ். வரணி, ஜேர்மனி)
தோற்றம் : 14. 01. 1957
மறைவு : 25. 02. 2016



அமரர்
**வீரசிங்கம் பரமேஸ்வரன்**
(மூன்றாம் ஆண்டு)
தோற்றம் : 08. 08. 1959
மறைவு : 24. 03. 2013



அமரர்
**நேசமணி கிறிஸ்ததாஸ்**
(யாழ். வதிரி)
தோற்றம் : 18. 12. 1945
மறைவு : 01. 03. 2016



அமரர்
**இரத்தினம் லோகநாதன்**
(வண்ணார்பண்ணை, லண்டன்)
தோற்றம் : 09. 09. 1951
மறைவு : 03. 03. 2016

# Colonne de Juillet

30 வருடங்களுக்குப் பிறகு பாரிஸின் பிரபல நினைவுத்தூபி மக்களின் பார்வைக்காக மீண்டும் திறக்கப் படவுள்ளது. 1830ஆம் ஆண்டு யூலை இடம்பெற்ற புரட்சியில் பாதிக்கப்பட்ட மக்களின் நினைவாக 1835ஆம் ஆண்டு Colonne de Juillet என்ற இந்த நினைவுத்தூபி கட்டப்பட்டது.

Bastille roundabout (ரவுண்டானா) நடுவில் அமைந்திருக்கும் இந்த வரலாற்று நினைவுத்தூபி மக்களின் பாதுகாப்புக் காரணங்களால் 1985இல் மூடப்பட்டது. பாரிஸின் வாகன நெரிசல் கூடிய Roun-dabouts இன் மையத்தில் இது அமைந்திருப்பதே முக்கிய காரணம்.



ஆர்ப்பாட்டத்திற்காகவோ அல்லது ஜனாதிபதித் தேர்தலில் சோசலிசக் கட்சி வெற்றிபெற்றாலோ மட்டுமே அங்கு மக்கள் திரள்வார்கள். பாரிஸின் மிக முக்கிய 7 பகுதிகளை பாதசாரிகளுக்கும் சைக்கிளோட்டி களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் மீள சீரமைப்பதற்கான திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது.

ColonnedeJuilletஐ சீரமைப்பதற்கான பணிகள் வரும் செப்ரெம்பர் மாதமே தொடங்கும் எனவும் 2018இன் பின்னரே திறப்பதற்குத் திட்டமிடப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதற்காக 3.1 மில்லியன் யூரோ செலவிடப்பட வுள்ளது.

1830 – 1848 வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற புரட்சியில் 500 தொடக்கம் 700 வரையான புரட்சியாளர்கள் கொல்லப்பட்டனர். இவர்களின் எச்சங்களைக் கொண்ட இரு பெரும் கல்லறைகளை இது தன்னகத்தே கொண்டுள்ளது.

# Barbie



**தாமாக** எந்த வேலைகளையும் செய்யத் தெரியாத பருவத்திலேயே எந்தப் பொம்மைகளைக் காட்டினாலும் வேண்டாம் எனச் சொல்லும் பிள்ளைகள் பல மடங்கு விலையுயர்ந்த Barbie தான் வேணும் என அடம்பிடிப்பது சகஜமாகிவிட்டது. இங்கேதான் வர்த்தக நுகர்வுக் கலாச்சாரத்தின் நுட்பமான தந்திரம் "வெற்றிகொண்டுள்ளது".

கொடி இடை, குச்சிக் கால்கள், மெல்லிய உடல். இது தான் பல தசாப்தங்களாக பெண் சிறுமி–களை தன் ஈர்ப்பில் வைத்திருக்கும் Barbie பொம்மைகளின் தோற்றம். உண்மையில் இது அழகானதா என்ற கேள்வி ஒரு புறமிருக்க சாத்தியமற்ற வடிவமென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இருந்தாலும் இதன் பின்னணியில் பல்வேறுபட்ட விடயங்கள் செல்வாக்குச் செலுத்துவதால் அவர்களை தடுக்கவோ அல்லது அவர்கள் இவற்றின் தோற்றத்தை மாற்றவோ முன்வரவில்லை.

இது தயாரிக்கப்பட்ட 1959ஆம் ஆண்டின் பின்னர் தற்போது "அழகு பற்றிய பரந்துபட்ட பார்வையை" பிரதிபலிக்கும் வகையில் மூன்று புதிய உடல்கட்டமைப்பு வகை–களை அறிமுகம் செய்வதாக அறிவித்துள்ளது Barbie நிறுவனம். 7 வேறுபட்ட தோல் நிறங்கள், ஆபிரிக்கப் பெண்களின் சுருட்டிய சிவப்பு முடி, நீளமான நீல முடி என 24 புதிய சிகையலங்காரங்களுடன் வெளிவரும் இந்த புதிய பொம்மைகள் காலங்காலமாக இருந்துவந்த Barbieயின் தோற்றத்திலிருந்து பெரிதும் வேறுபடுகின்றது.



Barbieயின் சந்தையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியே இவ்வாறான புதிய உத்திகளைக் கையாள அவர்களைத் தூண்டியுள்ளது.

உலகின் மிகவும் பிரபல்யமான Barbie பொம்மைகளின் விற்பனையை அதிகரிக்க இந்த புதிய அறிமுகம் உதவும் என இவற்றை உருவாக்கியுள்ள Mattel கருத்துத் தெரிவித்துள்ளார். ஒவ்வொரு செக்கனுக்கும் மூன்று Barbieகள் விற்பனை செய்யப்படுவதாக கணிப்புகள் தெரிவித்தாலும் கடந்த ஒக்ரோபர் மாதத்தில உலகளவில் 14 வீதம் விற்பனையில் சரிவு ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

"55 வருடங்களுக்கும் மேலாக உலகளாவிய ரீதியில் பல மில்லியன் சிறுமிகளின் கலாச்சாரப் புள்ளியாக, கற்பனைக்கும் ஊக்குவிப்புக்குமான ஒரு மூலமாக Barbie காணப்பட்டுவருகின்றது" என நிறுவனத்தினர் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் ஒரே கலாச்சாரத்தையே உலகெங்கும் வாழும் பெண்சிறார்கள் மீது இந்த பொம்மைகள் திணிக்கின்றன என்பது எதிர்மறைவில் மறுக்கமுடியாத உண்மை.

பெண்களின் உடல் எப்படித் தோற்றமளிக்கவேண்டும் என்பதில் உண்மைக்கும் யதார்த்தத்திற்கும் அப்பாற்பட்ட சிந்தனையை இளம் சிறுமிகள் மத்தியில் விதைப்பதாக இவை விற்பனைக்கு வந்த காலத்தில் குற்றச்சாட்டுகள் எழுந்தன. 1963களில் "எப்படி உடல் எடையைக் குறைப்பது" என்ற புத்தகத்தோடு இந்த பொம்மைகள் வெளியிடப்பட்டன. அதில் சாப்பிடாமல் இருப்பதற்கான வழிகாட்டுதல்களும் குறிப்பிடப்பட்டன.

இவர்களின் சந்தை வலிமையும், விற்பனையை அல்லது சிறுவர்கள் மத்தியில் இதன் மீதான மோகத்தைத் தூண்டும் புதிய புதிய சந்தை வியூகங்களும், உத்திகளுமே Barbieஐ நிலைத்திருக்கச் செய்கின்றன. 36 அங்குல மார்புச் சுற்றுடன் 18 அங்குல இடையையும் கொண்ட Barbie பொம்மைகள் சாதாரண பெண்களின் மாதவிடாய்க்குத் தேவையான 17 வீதமான உடல்கொழுப்புக் கூட அற்று காணப்படுவதாக ஆய்வுகள் பல தெரிவிக்கின்றன. வயிற்றுக்குள் இருக்கவேண்டிய உள்ளுறுப்புகளுக்குப் போதுமான இடம் கூட இல்லாத வகையில் இதன் இடுப்பளவு இருக்கின்றது.

2015இல் மேற்கொண்ட ஆய்வுகளின் படி ஐக்கிய இராச்சியத்தில் வாழும் 8 வயது சிறுமிகள் தமது உடல் தோற்றத்தில் திருப்தியற்றவர்களாக இருப்பதாகவும் 40 வீதமான 14 வயது சிறுமிகள் தொடர்ச்சியான உணவுக் கட்டுப்பாட்டை பின்பற்றுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## • உலகின் மிகப்பெரிய கப்பல்

உலகின் மிகப்பெரிய கப்பல் Harmony of the Seas முதன்முதலாக தனது கன்னிக் கடற் பயணத்தை பிரான்சிலிருந்து ஆரம்பித்துள்ளது. ஈபிள் கோபுரத்தைவிட நீளமானதும் ரைற்றானிக் கப்பலை விடவும் 100 மீற்றர் நீளமானதுமான இந்தக் கப்பல் பிரான்சின் Saint Nazaire துறைமுகத்திலிருந்து மார்ச் 11ஆம் திகதி தன் பயணத்தை ஆரம்பித்தது.

362 மீற்றர் நீளமான Harmony of the Seas கப்பலின் இயங்குதிறனைப் பரிசோதிப்பதே இந்தப் பயணத்தின் முக்கிய நோக்கம். 16 அடுக்கு மாடிகளைக்கொண்ட இந்தக் கப்பலின் உட்பகுதியை பார்வையிட சுற்றுலாப்பயணிகளுக்கு சில மாதங்களாக அனுமதி வழங்கப்பட்டிருந்தது. 500 பணியாளர்களுடன் மட்டுமே தன் பரிசோதனை ஓட்டத்தை மேற்கொண்டுள்ளது.



தற்போதுள்ள உலகின் பிரமாண்ட உல்லாசக் கப்பல்களான Allure of the Seas, Oasis of the Seas ஆகியவற்றை விட இது அகலத்தால் ஒரு மீற்றர் கூடியது. இவை மூன்றும் அமெரிக்க Royal Caribbean Cruises Ltd நிறுவனத்துக்கு சொந்தமானவை என்பது குறிப்பிடத்தக்கது. Carnival Corporation & plc ற்கு அடுத்து உலகின் இரண்டாவது மிகப்பெரிய கப்பல் நிறுவனம் இதுவாகும்.



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு




# மெத்ரோ பாடகன் Vanupié

**தனது இசைப் பயணத்தின்** ஒரு பகுதியை Châtelet Les Halles மெட்ரோ நிலையத்தில் கழித்துவரும் கலைஞன்.

மெட்ரோப் பாடகனாக ஒன்றிரண்டு அல்ல தொடர்ந்து 12 வருடங்களாக இவரது இசைப்பயணம் தொடர்ந்து வருகின்றது என்றால் அது வியப்பாகத்தான் உள்ளது.

ரெக்கே (Reggae) இசைஞரான 36 வயதாகும் Vanupié ஆரம்பத்தில் பிரான்ஸின் விளம்பர நிறுவனமொன்றில் பணிபுரிந்தவர். இசையின் மீது கொண்ட மோகம் அவரை தனது பணியை உதறி முழு நேர இசைஞனாக்கியது.

இன்று Bataclan, Cigale எனப் பிரபல இசை நிகழ்வு மண்டபங்கள் நிறைந்த ரசிகர்களுடன் நிகழ்ச்சி நடாத்தி வந்தாலும் மெட்ரோ நிலையத்தில் பாடுவதை மட்டும் நிறுத்தவில்லை. நாளுக்கு 3 மணி நேர இசைக் கச்சேரி எனத் தொடர்கிறது.

மெட்ரோ நிலையங்களில் இவ்வாறு பாடுவதற்கு RATP நிர்வாகத்தின் அனுமதி பெற்றிருக்கவேண்டும். வருடா வருடம் இவ் அனுமதிக்காக 1000 விண்ணப்பதாரிகள் விண்ணப்பிப்பதுண்டு. RATP 300 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்குகின்றது. Vanupié 12 வருடங்களாக 6 மாதத்திற்கு ஒரு தடவை தனது அனுமதியை புதுப்பித்து வருகின்றார்.

பல்லாயிரக்கணக்கான பயணிகள் கடந்து செல்லும் Châtelet Les Halles இல் எந்தவித கவனச் சிதறலுமின்றி பாடும் Vanupié ன் குரல் மெட்ரோ நிலையத்துடன் ஒன்றிவிட்டது என்கிறது RATP நிர்வாகம்.

இவ்வாறு ஒரு நாள் பாடும்போது பாடகி Madonna வின் நடனக் கலைஞர்கள் எதேச்சையாக இவ்வழியாக வரும்போது எனது பாடல்களுக்கு நடனமாடினார்கள். அன்று சுற்றி நின்று ரசித்தவர்களின் எண்ணிக்கை பல நூறு ஆகும். அன்று மட்டும் எனக்கு முன்னால் 1100 யூரோக்கள் சிதறவிடப்பட்டிருந்தன. அன்றைய நாள் என்னால் மறக்கமுடியாத நாள் என்கிறார் கலைஞனுக்கே உரிய பெருமையுடன். ●



# Rembrandt ஓவியங்கள்

**கடந்த 130 வருடங்களாக** *தனிப்பட்டரீதியில் பேணப்பட்டுவந்த Rembrandt இரு ஓவியங்கள் மக்கள் பார்வைக்கு வந்துள்ளன. மார்ச் 10ஆம் திகதியிலிருந்து பாரிஸில் அமைந்துள்ள Louvre அருங்காட்சியகத்தில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.*

*Louvre அருங்காட்சியகம், ஆம்ஸ்ரடாமில் உள்ள Rijksmuseum ஆகி யவை இணைந்து இந்த இரு ஓவியங்களையும் 160 மில்லியன் யூரோவுக்கு வாங்கியுள்ளன. ஆம்ஸ்ரடாம் வர்த்தகர் ஒருவரையும் அவரது மனைவியையும் சித்தரிக்கும் இந்த ஓவியங்கள் 1634ஆம் ஆண்டில் வரையப்பட்டவை. அவர்களின் திருமணத்தின் போது வரையப்பட்ட இந்த ஓவியம் ஓவியரின் உச்ச சிறப்பை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளன.*

*1877ல் Baron Gustave de Rothschildஆல் வாங்கப்பட்ட இந்த ஓவியம் அப்போதிலிருந்து France இல் பேணப்பட்டு வந்துள்ளது. இனிமேல் முதலில் ஐந்து வருடங்களும் பின்னர் எட்டு வருடங்களுமாக மாறி மாறி இரண்டு மியூசியத்திலும் சோடியாகவே வைக்கப்படவுள்ளன.*

*ஆரம்பகட்டமாக இப்பொழுது 3 மாதங்களுக்கு Louvre அருங்காட்சியகத்தில் இவை வைக்கப்பட்டுள்ளன. பிரான்ஸ் அதிபர் François Hollande , நெதர்லாந்தின் அரசர் Willem Alexander அரசி Maxima ஆகியோரின் பிரசன்னத்தில் இவை திரைநீக்கம் செய்யப்பட்டுள்ளன.*

# விதி மதியா ஓட்டுனர்கள்




*பிரான்சில் முதல் முயற்சியாக STOP அடையாளத்தில் நிறுவப்பட்ட கமரா சற்றே அதிர்ச்சித் தரவைக் கொடுத்துள்ளது. ஆக ஒரு காலைப்பொழுதில் மட்டும் 500 பேர் STOPஇல் நிற்காமல் மூர்க்கத்தனமாக வாகனம் செலுத்துவது பதிவாகியிருந்தது.*

*STOP அடையாளத்தில் முற்றுமுழுதாக கார் சில்லு உருளா தபடி நிற்கவேண்டும் என்பதே பிரான்ஸ் நாட்டு சாலை விதிகளில் முக்கியமான ஒன்று. பெரும்பாலான ஓட்டுனர்கள் இந்த இலகுவான விதியைக் கூட பின்பற்ற தவறுகின்றனர். இதுவே பிரான்ஸில் முதன் முதலாக STOP அடையாளத்தில் கமரா பொருத்துவதற்கு வழிகோலியது.*

*பாரிசின் தெற்கில் Yerres என்ற நகரத்தின் முக்கிய சந்தி ஒன்றில் இப்போது இது நிறுவப்பட்டு பரிசோதிக்கப்படுகின்றது. வீதி சமிக்ஞைகளில் வைக்கப்பட்டுள்ள கமரா போன்றே இதுவும் செயற்படும்.*
*விதியை மீறிய அனைவருக்கும் சாரதி அனுமதிப் பத்திரத்திலிருந்து 4 புள்ளிகள் விலக்கப்படுவதுடன் 135 யூரோ அபராதமும் அறவிடப்படும். இதேபோன்று Marseille நகர அதிகாரிகள் பாதசாரிக் கடவைகளிலும் கமரா பொருத்துவது பற்றி ஆலோசித்து வருகின்றனர். பாதசாரிக் கடவையில் கடப்பதற்கு ஒருவர் காத்திருந்தாலோ அல்லது கடக்க உன்னிப்பதாகத் தோன்றினாலோ சாரதிகள் நிற்கவேண்டிய கட்டாய கடப்பாடு பிரான்சில் காணப்படுகின்றது. ஆனாலும் நிற்பதும் நிற்காமல் போவதும் வாகன ஓட்டுனரைப் பொறுத்ததே. பெரும்பாலான ஓட்டுனர்கள் கட்டாயம் நிற்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டாலே ஒழிய நின்று கடக்க இடமளிப்பதில்லை. இதற்காக பாதசாரிக் கடவையிலும் கமரா பொருத்துவது பற்றி ஆலோசிக்கப்படுகின்றது.*
*2012இல் 1893 பேர் பாதசாரிக் கடவையில் விபத்துக்குள்ளாகிக் காயமடைந்துள்ளனர். 18 பேர் இறந்துபோயுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.*


இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு



லாச்சப்பலில்
விஷ்ணு கபே
தரம்-சுவை
இலங்கை இந்திய அறுசுவை உணவுகளை உண்டு மகிழ்ந்திட
187, rue du Faubourg Saint-Denis, 75010 Paris




## ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைய பொஸ்னியா விண்ணப்பம்

யூக்கோஸ்லாவியாவில் இருந்து பிரிந்த நாடான பொஸ்னியா இரண்டு சமஷ்டி பிரதேசங்களாக பொஸ்னியா, ஹெர்செகோவின் என இயங்குகின்றன. 51 197 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட நாட்டில் அலுவலக மொழிகளாக சேர்பி, கொறாசி, கொறற் ஆகிய மொழிகள் உள்ளன. மக்கள் தொகை 38 லட்சத்து 75 ஆயிரம்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைய விருப்பம் தெரிவித்து 15 பெப்ரவரி 2016 இல் பொஸ்னியா தனது விண்ணப்பத்தை சமர்ப்பித்துள்ளது.
முடிவுக்கு இன்னும் நான்கு ஆண்டுகள் காத்திருக்கவேண்டும்.

# பிரான்ஸில் அவசரகால நிலை நீடிப்பு!

அவசரகால நிலையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என மனித உரிமைகள் அமைப்புக்களால் விடுக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

13 நவம்பருக்குப் பின்னர் அமுல்படுத்தப்பட்ட அவசரகால நிலைப் பிரகடனம் தொடர் நீட்சியைப் பெற்றுவருவது அறிந்ததே. மக்களின் பாதுகாப்புக் குறித்த சட்டம் தான் என்றாலும் பல தருணங்களில் இந்நிலை மக்களுக்கு ஏற்படுத்தும் பாரதூரமான தாக்கங்களைக் கருத்திற்கொண்டு முடிவுக்குக் கொண்டுவரக் கோரப்பட்டது.

தற்போது பிரான்ஸில் நிலவும் பாதுகாப்பின்மையை கவனத்தில் எடுத்துப் பார்க்கும் போது அவசரகால நிலை முற்றுக்குக் கொண்டுவர முடியாத நிலையே காணப்படுகின்றது என அரச ஆலோசனைக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்து செனட் சபை ஒப்புதலும் பெறப்பட்டு மூன்றுமாதகால நீடிப்பைப் பெற்றுள்ளது. 348 அங்கத்தவர்களில் 316 அங்கத்தவர்களின் ஒப்புதலுடன் நீட்சி பெற்றுள்ளது. கமியூனிஸ்ட் குழுவினரும் பசுமைக் கட்சியினரும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**பிரான்ஸ் நாட்டவரில்**

- 22 வீதமானவர்கள் தங்கள் வீடுகளை ஒழுங்குபடுத்துவதில் எவ்வித அக்கறையும் அற்றிருக்கிறார்கள்.
- அதேவேளையில் நாட்டின் சனத்தொகையில் 2 வீதமான மக்கள் மிகவும் நேர்த்தியாக தங்கள் வீடுகளை ஒழுங்குபடுத்துபவர்களாக உள்ளனர்.

**சிவன்கோயில் - லாக்கூர்னெவ்**

**சித்திரத்தேர்**

எமது ஆலயத்தின் சித்திரத்தேர்
திருப்பணிகள் சிறப்பாக
நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.
வெள்ளோட்டத் திருநாள்
விரைவில் அறியத்தரப்படும்.



தொடர்புகளுக்கு : ஆலயம் : 01 48 36 26 73
ஆலயகுரு : 06 64 79 28 37

## 'கடற் குமிழி' *(Sea Bubble)*



**செயின் நதிக்கு மேலாக** மிதந்து செல்லக்கூடிய சாரதியற்ற புதிய ரக வாகனம் ஒன்றை வடிவமைத்துள்ளார் பிரான்ஸ் கண்டுபிடிப்பாளர் ஒருவர். இதன் வடிவமைப்பு ஏற்கனவே மிகவும் பிரபலமடைந்துள்ளது.

படகுகளைக் கொஞ்சம் பறக்கவைத்தால் என்ன என்று ஆசைப்பட்டார் Alain Thébault. 25 வருட முயற்சியில் அவரின் தீராத முயற்சியால் கனவு பலித்தது. சாரதியற்ற இப்புதிய ரக வாகனம் செயின் நதிக்கு மேலாக மிதந்து செல்லக்கூடியது. இதன் வடிவமைப்பு ஏற்கனவே மிகவும் பிரபலமடைந்ததே.

மரத்தால் மாதிரிகள் வடிவமைக்கப்பட்டதில் ஆரம்பித்து மிக அண்மையில் படகோட்டத்தில் வேக சாதனையையும் முறியடித்துள்ளது.

நான்கு செட்டைகளைக் கொண்ட ஒரு குமிழி – அதாவது "கடற் குமிழி" இதுவே அவரது புதிய திட்டம். நீர்ப்பரப்பின் மேல் மிதப்பது போன்று பறக்கக்கூடியது. இரு சிறு மின் இயந்திரங்களின் உதவியுடன் மணிக்கு 18km வரை செல்லக்கூடியது.



# ‘La France pour la vie’



**- நிக்கோலா சார்க்கோசி**




**பிரான்ஸின் முன்னாள் ஜனாதிபதி** நிக்கோலா சார்க்கோசி, அண்மையில் புதிய நூல் ஒன்றினை எழுதி வெளியிட்டுள்ளார். அதிகாரத்தில் இருக்கும் போது தான் செய்த தவறுகளை சுயவிமர்சனமாக இந்நூலில் பதிவிட்டிருக்கிறார். "பிரான்ஸ் தான் எனது வாழ்க்கை" (“La France pour la vie” ) என்னும் தலைப்போடு வெளிவந்த இந்நூலினை 2017 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான ஒரு பிரச்சார உத்தியாகவே அரசியல் விமர்சகர்களால் நோக்கப்படுகின்றது. இணைய விற்பனைத் தளமான பிரான்ஸ் அமேசன் மற்றும் விற்பனை நிறுவனமான FNAC ஆகியவற்றின் இணையத் தளங்களில் “La France pour la vie” என்ற இந் நூல் விற்பனையில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

சார்க்கோசி தான் செய்த தவறுகள் பலவற்றை இந் நூலில் பட்டியலிட்டுள்ளார். பாரிஸில் இடம்பெற்ற விவசாய ஒன்றுகூடலில் ஒருவரை "தொலைந்து போ, முட்டாள் எனக் கூறியதை வருத்தத்துடன் பதிவிட்டுள்ளார். அந்தக் கால கட்டத்தில் இவரது எதிரணியினர் இதற்காகப் பெரும் ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்புவிடுக்கவும் இச்செயல் காரணமாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.

"இந்த முட்டாள் தனத்திற்காக இன்று வரை நான் மனம்வருந்துகின்றேன்" எனவும் "ஜனாதிபதிக்கான கௌரவத்தை இது புதைகுழிக்குள் இட்டுச்சென்றது" எனவும் சார்க்கோசி அந்நூலில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

2007 ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய போது ஆடம்பரச் சொகுசுப் படகில் தான் கோலாகலமாகக் கொண்டாடியதையிட்டு மனம் வருந்துவதாகவும் தான் செய்த மிகப் பெரிய தவறுகளில் இதுவும் ஒன்று எனவும் கூறும் அவர் இதுவே தனக்கு ‘Bling Bling ஜனாதிபதி’ என்ற பட்டப் பெயரையும் பெற்றுத் தந்துவிட்டதாகக் கவலை தெரிவித்துள்ளார்.

# twitter


**சமூக வலையமைப்புத்தளங்களில்** ஒன்றான Twitte மைக்ரோ வலைப்பதிவிடல் சேவை ஆரம்பமாகி இன்று (21 பங்குனி 2006) 10 வருடங்கள். 35 மொழிகளில் நாளுக்கு 500 மில்லியனுக்கும் அதிகமான ‘Tweets’. மில்லியாட்டில் கணக்குகள்.

17 மில்லியன் நாளாந்த பாவனையாளர்கள் அறிமுகமாக ஒரு சில வருடங்களில் கிடு–கிடுவென பாவனையாளர்களாலும், ஈட்டும் வருமானத்தாலும் உயர்ந்தாலும் தற்போது இறங்குமுகத்தைச் சந்தித்து வருவதாகக் அறியப்படுகின்றது. 2013ல் பங்குச்சந்தையில் இணைந்தது இணையும் போது 1 பங்கு 26 டொலராக அறிமுகமாகி 69 டொலராக உயர்ந்து இன்றைய திகதியில் 14 டொலராக குறைந்துவிட்டது. 2015ல் வருமானம் 2, 2 மில்லியாட் யூரோக்களாகும்.

ஒருவரை பின் தொடர்பவர்களின் எண்ணிக்கையில் முதல் மூன்று இடங்களில் Katy perry (83, 9 மில்லியன்), Justin Bieber(76, 6 மில்லியன்), Taylor swift (72, 4 மில்லியன்) இருக்க அரசியல் பிரபலமாக அமெரிக்க அதி–பர் Barack Obama (70, 7 மில்லியன்) பேருடன் நான்காம் இடத்தில் அமர்ந்துள்ளார்.

இவற்றையெல்லாம் விட Twitter குருவியின் இன்னுமொரு பெருமையும் பதிவாகியுள்ளது. ஆம் குருவிக்கு வயது 35000 வருடங்களாம். தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் பிரான்சின் தென்மேற்குப்பகுதியான Bergerc அகழ்வாராய்ச்சியில் கண்டெடுத்த ஒரு கல்வெட்டில் Twitter குருவிக்கு ஒப்பான உருவப்படம் மனிதனால் செதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். இது ஒரு வகை குருவி உருவம் தான் என்றாலும் Twitter குருவியை ஒத்திருப்பது பலரையும் வியப்புக்குள்ளாக்கியுள்ளது.

## நிலா குறுக்கெழுத்துப் போட்டி – 22



**மேலிருந்து கீழ்**

1. இது தேவர்களின் உணவு (6)
2. சண்டை அல்லது போரை இவ்வாறும் கூறலாம் (4)
3. சிறைபட்ட குற்றவாளி (2)
4. உடன்பிறந்த எதிர்பாலாரின் மகன் அல்லது மகளின் கணவன் (5)
6. ஆண் யானையின் வாயின் இருபக்கம் காணப்படும் வெண்கொம்பு (4)
7. மருத்துவக்குணம் கொண்ட மரங்களில் ஒன்று (3)
8. எதிரி (4)
9. பயம், வீரம், சிரிப்பு, அற்புதம், வெட்கம், கருணை, அருவருப்பு, கோபம், அமைதி ஆகியவற்றை இவ்வாறு அழைக்கலாம் (5)
11. குரங்குகளை இவ்வாறும் கூறலாம் (குழம்பியுள்ளது) (4)
12. மாதங்களில் ஒன்று (2)
13. பழம் (2)

**இடமிருந்து வலம்**

1. மகாபாரதப் போரில் கண்ணன் ஏற்றுக்கொண்ட பாத்திரம் (6)
2. திருமணமாகாத இளம்பெண் (4)
5. பாலமரக்குற்றியைக் குடைந்து செய்யப்படும் தோல் இசைக்கருவி (6)
9. பெண் (3)
10. ஒரு வகை வாழை (3)
12. திருவாசகம் இயற்றிய சைவசமயக்குரவர்கள் (8)
14. அரசனின் ஆசனம் (6)

✔ உங்கள் பதில்களை 10 வைகாசி 2016 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்
சரியான விடை எழுதி அனுப்பிய அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள்!

நிலா குறுக்கெழுத்துப்போட்டி இல.21ல் பரிசு பெறுபவர்கள்.

1. சயானா (La Courneuve)
2. வசந்தன் கனகரத்தினம் (Drancy)
3. ராதா கனகராஜா (Aulnay-sous-Bois)

**சரியான விடை எழுதியவர்கள் :**

- Faizaan (La Courneuve)
- பிரசாந்தன் விஜிதா (Le Bourget)
- தர்மகுணம் சிவமி (Gonesse)
- சசிகலா சிவசுதக்குருக்கள் (Le Bourget)
- சத்தியமூர்த்தி சுப்பிரமணியம் (Paris 12)
- நாகமணி ஜோதிநாயகம் (Emerainville)

லாச்சப்பலில்... Gooday
இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

எங்கள் 16 வருட கால அனுபவம் உங்களுக்கான நிறைந்த சேவையை வழங்குகிறது!

# Autre Vue

**OPTICIEN**

*Donnez un sens à votre Regard*

Jusqu'à **40%** Sur les Montures optiques*

**25%** Sur les Solaires*

*voir conditions au magasin

## பாரீஸ் மாநகரில் தமிழ் மக்களின் நன்மை கருதி இளைய தலைமுறையின் புதியதோர் உதயம்

சிறியோர் முதல் பெரியோர் வரை சகலவிதமான நவீனரக மூக்குக்கண்ணாடிகள், லென்ஸ் வகைகள் மேலும் பலவிதமான நவீன கோடைகாலக்கண்ணாடி வகைகள் சர்வதேச தரமானதாகவும் மலிவானதாகவும் உங்கள் விருப்பம் போல் தெரிவு செய்து பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே நம்பிக்கையான தமிழர் நிறுவனம் Autre Vue அத்துடன் உங்களுக்கான இலவச ஆலோசனைகள் எப்பொழுதும் வழங்கப்படும்.

**உங்களது தேவை ! எங்களது சேவை !**



Mutuelle, CMU

ஊடாக தரமான

கண்ணாடிகளை

பெற்றுக்கொள்ளலாம்



எமது புதிய கிளை:

Autre Vue

58, Av. Flandre - 75019 Paris

Tél / Fax : 09 66 91 54 04 / 01 42 80 54 04

**M° : Riquet (Ligne 7)**

Autre Vue

23 rue lamartine - 75009 Paris

Tél / Fax: 01 53 20 04 10

09 67 33 12 83

email: autrevueparis09@gmail.com



# என்னை வழிநடத்துவது எனது மனச்சாட்சி மட்டுமே!



# இறுதித் துருப்புச் சீட்டையும் இழந்துநிற்கும் ஹொலந்


சோசலிச அரசின் தனித்துவம் மிக்க இடதுசாரிய அமைச்சர் என வர்ணிக்கப்பட்ட நீதித் துறை அமைச்சர் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். எந்தவொரு கருத்தையும் வெளிப்படையாகப் பேசக்கூடியவரும் போராட்டக் குணமுடையவருமான Christiane Taubira வின் பதவி விலகல் அதிபர் பிரான்சுவா ஹொலந்தின் தலைமையை மேலும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. 2013இல் அமுல்ப்படுத்தப்பட்ட (Mariage Pour Tous) ஒரே பாலினத்தவர்களுக்கான திருமணச் சட்டமூலம் Christiane Taubira இல்லாத பட்சத்தில் சாத்தியப்பட்டிருக்க வாய்ப்பில்லை என்பது கட்சி பேதங்கள் இன்றிய பொதுக் கருத்தாகும்.

முன்னாள் பொருளாதார அமைச்சர் Arnaud Montebourg, கல்வித் துறை அமைச்சர் Benoît Hamon, வீட்டுவாரியத் துறை அமைச்சர் Cécile Duflot, ஆகியோரின் வெளியேற்றங்களைத் தொடர்ந்து ஆட்சிக் கால ஆரம்பம் முதல் தனது துரித முடிவுகளால் அரசுக்குப் பலம் சேர்த்து வந்த Christiane Taubira வின் பதவி விலகலானது அதிபர் பிரான்சுவா ஹொலந்த் தனது ஆட்சியை சரிவரத் தக்க வைத்துக் கொள்வதற்கான இறுதித் துருப்புச் சீட்டையும் இழந்துவிட்டார் என அரசியல் விமர்சகர்களால் விமர்சிக்கப்பட்டுள்ளது.

"என்னை வழிநடத்துவது எனது மனச்சாட்சி மட்டுமே. என்னால் மனச்சாட்சிக்குப் புறம்பாக ஒருபோதும் செயற்படமுடியாது" எனத் தெரிவித்த Christiane Taubira «அரசியல் கருத்து வேறுபாடு காரணமாக நான் இவ் அரசியலில் இருந்து வெளியேறுகின்றேன்" எனத் தனது பதவி விலகல் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.



பலமுறை அரசியல் கருத்து வேறுபாடுகள் நீண்ட விவாதங்களால் சரிப்படுத்தப்பட்டுள்ளன. இருப்பினும் இம்முறை அதிபர் பிரான்சுவா ஹொலந்தினாலும் பிரதமர் மனுவல் வால்சினாலும் முன்வைக்கப்பட்டு அவர்களால் கடுமையாக ஆதரிக்கப்படும் இரட்டைக் குடியுரிமை ரத்துச் சட்ட மூலம் விவாதங்களுக்கோ பரஸ்பரங்களுக்கோ இடம் கொடுக்கவில்லையெனவும். இச்சட்ட மூலம் அறிவிக்கப்பட்ட காலம் முதலே தனக்கு உடன்பாடு இல்லையெனவும் தான் கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.



## Christiane Taubira

தென் அமெரிக்கக் கண்டத்தில் அமைந்துள்ள பிரான்சின் கடல்கடந்த மாகாணங்களில் ஒன்றான Guyane ஐ பிறப்பிடமாகக் கொண்டவர். பொருளாதாரத்துறைப் பேராசிரியரான இவர் 1978ம் ஆண்டு தனது முதல் அரசியற் பிரவேசத்தைக் களப்போராளியாக ஆரம்பித்தார். 1993ல் சமவுடமைக் கொள்கைக்கட்சியான Walwari கட்சியைத் தோற்றுவித்தார். 1993 முதல் 2012ம் ஆண்டு வரை குயான் சட்டசபை உறுப்பினராக செயற்பட்டு வந்த Christiane Taubira 1994 முதல் 1999 வரையிலான காலகட்டத்தில் ஐரோப்பியப் பாராளுமன்ற உறுப்பினராகவும் அங்கம் வகித்துள்ளனர். 2002ம் ஆண்டு பிரான்ஸ் அதிபர் தேர்தலில் பாரம்பரிய இடதுசாரியக்கட்சி (PRG) (Parti Radical de Gauche) சார்பாக போட்டியிட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இடதுசாரிய அரசியல் பரப்பில் செயற்திறன்மிக்க இரும்புப் பெண்மணி. அடிமைத்துவம், மற்றும் அடிமை வர்த்தகம், மனிதகுலத்துக்கு எதிரான குற்றம் என்ற சட்டமூலத்தோற்றமும், ஒருபாலினத்திருமணச்சட்ட அமுலாக்கமும் இவரின் வாழ்நாள் சாதனைகளாகும்.

64 வயதாகும் Christiane Taubira வின் இந்த வெளியேற்றம் 2017 அதிபர் தேர்தலை முன்னிறுத்தியதே எனவும், மீண்டும் வேட்பாளராக இறங்கும் வாய்ப்புகள் உள்ளது எனவும் அரசியற்பரப்பில் ஊகங்கள் உண்டு. ஆனால் மீண்டும் Christiane Taubira தேர்தலில் நிற்பதை பிரான்ஸ் மக்களில் வெறும் 14 சதவீதத்தினரே விரும்புகின்றனர் என்பது கருத்துக்கணிப்பாகும்.


பிரான்ஸ் திருமறைக்கலாமன்றத்தின் நடாத்தும் கலைவண்ணம் 25. 09. 2016

உடல் அரங்கியல் இதழ் நடாத்தும் சர்வதேச நாடகவிழா 23/24/25. Sept. 2016

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி ப.மா.சங்கத்தின் 25வது ஆண்டுவிழா 12.06.2016

சார்சல் தமிழ்ச்சங்கத்தின் வெள்ளிவிழா 03. 04. 2016

வேலணை ப.மா.சங்கத்தின் நடாத்தும் வருடாந்த ஒன்றுகூடல் 03.04.2016



புங்குடுதீவு மக்கள் ஒன்றியம் பாரதி விளையாட்டுக்கழகம் இணைந்து நடாத்தும் நாவலர் விருது குறும்படவிழா 08. 05. 2016

ஏவ்றி பிராங்கோ தமிழ்ச்சங்கத்தின் 20வது ஆண்டுவிழா 03. 04. 2016

மன்னார் மாவட்ட அபிவிருத்தி அமைப்பின் ஆண்டுவிழா 08. 05. 2016

இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு




# Campus Condorcet

## Harvard ற்கு இணையாக பிரான்சில் புதிய பல்கலைக்கழகம்!

1636 ல் தோற்றம் கொண்ட அமெரிக்காவின் பெருமைமிகு உயர்கல்விக்கலைக்கூடம் Harvard பல்கலைக்கழகத்துக்கு இணையாக பிரான்சில் புதிய பல்கலைக்கழகம். இன்னும் பெருமையாக 93 பகுதியில் Aubervilliersல் அமையவுள்ளது.

ஐரோப்பிய அளவில் சமூக மற்றும் மானிட அறிவியல் துறையின் பாரியதும், முதன்மையானதுமாக தோற்றம் பெறவுள்ளது. 'Campus Condorcet' எனப்பெயர் சூட்டப்பட்டுள்ள இப்பல்கலைக்கழகம் 6 ஹெக்டரில் 180000 m² கட்டிடங்களாக நிர்மாணம் பெறவுள்ளது.

2008ம் ஆண்டு முளைவிட்ட இத்திட்டம் தற்போது ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. 2017ம் ஆண்டு ஆரம்பமாகவுள்ள கட்டுமானப் பணிகள் முடிவுக்கு வந்து 2019ம் ஆண்டு Campus தனது கதவுகளைத் திறக்கும்.

12ம் இலக்க மெத்ரோத்தடத்தின் புதிய தரிப்பிடமான Front populaire காலடிகளில் ஆரம்பமாகும் Campus வளாகம் நீண்டு Porte de la chapelle வரை செல்லவுள்ளது. இங்கு 18 ஆயிரம் மாணவர்கள் உயர்கல்வி கற்றுத்தேறவுள்ளனர். இரு பகுதியாக ஒன்று Aubervilliers பகுதி மற்றையது Porte de la chapelle பகுதி என வகுக்கப்பட்டுள்ளது. இதில் Aubervilliers பகுதியில் மட்டும் 13 ஆயிரம் மாணவர்கள்.
முதற்கட்ட செலவினமாக 700 மில்லியன் யூரோக்கள் காட்டப்பட்டுள்ளது. இதில் 450 மில்லியன் யூரோக்களை அரசு வழங்கவுள்ளது.

100க்கும் அதிகமான ஆய்வுப் பிரிவுகள்: முனைவர்பட்டப்படிப்பு, முதுநிலைப்பட்டப் பிரிவு, இளநிலைப் பட்டப்பிரிவு எனப்பல பிரிவுகளை தன்னகத்தே கொண்டுள்ள Campus Condorcet இல் இன்னும் பெருமையாக பொதுமக்களுக்குமான பாரிய மிக நவீன திறன்கள் கொண்ட பொது நூலகமும், ஆய்வகமும் தோற்றம் பெறவுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.




Campus ன் தோற்றத்துக்குப்பின் 93 பகுதிக்கும் குறிப்பாக Aubervilliersபகுதிக்கு கல்வியும், இளமையும் ஒன்றுசேர புதிய முகத்தைத் தோற்றுவிக்கும் என்பதில் எந்தவித ஐயப்பாடுகளும் இல்லை எனவும் Aubervilliers Harvard க்கும் Oxford க்கும் இணையாக பெருமைபெறும் எனவும் Aubervilliers நாடாளுமன்ற உறுப்பினரான சோசலிசக் கட்சியைச் சேர்ந்த Elisabeth Guigou பெருமையாகத்தெரிவித்துள்ளார்.





இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

# பிரெஞ்சு மொழியில் எழுத்துச் சீர்திருத்தம்

## #Je suis Circonflexe

Molière ன் மொழி என வர்ணிக்கப்படும் பிரெஞ்சு மொழியில் எழுத்துச் சீர்திருத்தம் பொது நடைமுறைக்கு வரவுள்ளது. 1990ல் பிரெஞ்சு உயர்கல்விக்கூட அக்கடமியினால் அனுமதிக்கப்பட்ட இச் சீர்திருத்தம், பாடசாலைகளையும் எட்டவுள்ளது.

இத்திருத்தங்களின் முக்கிய நோக்கம், மொழியின் எழுத்து வடிவத்தையும், வாசிப்பு முறையையும் இலகுபடுத்தலேயாகும் என அக்கடமியினர் தெரிவித்திருந்தனர். இத் திருத்தங்களால் 2400 பிரெஞ்சு சொற்கள் மாற்றம் பெறவுள்ளன.

குழப்பமான எழுத்தமைப்புகளை கொண்ட சொற்கள், பல வேளைகளில் மொழி அறிஞர்களையே குழப்பத்திற்குள்ளாக்கும் போது, புதிதாக மொழி பயில்பவருக்கு இன்னும் கடுமையான குழப்பங்களைதான் கொடுக்கும். மேலும் தற்போதைய இளம் பிராயத்தினர் SMS மொழிக்குள் தம்மைத் தொலைத்து விட்ட நிலையில், எமது மொழியில் சில இறுக்கங்களைக் களையவேண்டியது கட்டாயமாகின்றது எனவும் தெரிவித்திருந்தனர்.

Sandwiches தனது ‘e’ வை இழந்து Sandwichs என மாற்றம் பெறுகின்றது. Trait d’union (-) இடைக்கோடு இடும் முறைகுறைக்கப்படுகின்றது. Pique - Nique தற்போது Picnic என எழுத முடியும்.

நவீன பிரெஞ்சு மொழியில் 16ம் நூற்றாண்டுகளில் அறிமுகமான L’accent Circonflexe (^) தற்போது i மற்றும் u விலிருந்து நீக்கம்பெறுகின்றது. Abîme - Abime எனவும், Coût - Coute ஆகவும் மாற்றம் பெறும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இவ் ஒவ்வொரு மாற்றங்களும் வரும் செப்டெம்பர் மாதம் முதல் அகராதிகளிலும், பாடப்புத்தகங்களிலும் இடம் பிடிக்கவுள்ளன.

இந்நிலையில் குறிப்பாக L’accent Circonflexe ன் மாற்றத்திற்கு தற்போதைய பிரெஞ்சு உயர்கல்விக்கூட அக்கடமியினர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

மொழி என்பது எமது அடையாளங்களில் முக்கியமானதும் இன்றியமையாததுமாகும். வரவிருக்கும் எழுத்துச்சீர்திருத்தங்கள் கொண்டாடப்படும் எமது மொழியை அலங்கோலப்படுத்துவது போலாகிவிடும் எனவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் 1990ல் குறிப்பிடப்பட்ட மாற்றங்கள் Circonflexe ன் அச்சு வடிவங்கள் குறித்தே அன்றி முற்றிலுமாக நீக்குவது தொடர்பாக அல்ல என, வரலாற்று ஆசிரியரும், அக்கடமி உறுப்பினருமான Hélène Carrère d’Encausse தெரிவித்துள்ளார்.

மாணவர்களுக்கு மொழிப்பயில்வை இலகுவாக்க வேண்டுமாயின், மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டியது கற்பித்தல் முறைகளில்தானே அன்றி மொழியில் அல்ல எனவும் தெரிவித்துள்ளனர்.

பிரான்சில் மொழிப் பற்றாளர்களும் தொடர்ந்து தமது எதிர்ப்பினை #jesuis circonflexe என்னும் Hashtag டன் சமூக ஊடகங்களில் தொடர்ந்து பதிவு செய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**எவ்வளவு சம்பாதிக்கிறோம் என்பதைவிட...**
**முக்கியமானது**
**எவ்வளவு சந்தோசமாய் இருக்கிறோம் என்பது...**


இலங்கை தமிழ் பழையமாணவர் ஒன்றியம்
uaets-france.fr
கணக்கு விபரங்களை இணையத்தில் பார்வையிடலாம்.
uaets



நிலா
நிலாவினைப்பெற்றுக்கொள்ள..

சங்கீதா அச்சகம்
39, Bld. de la Chapelle - 75010 PARIS

ரூபி அச்சகம்
10, Rue Labat - 75018 PARIS

CHANGE MAGENTA
77, Bld. de Magenta - 75010 PARIS

ASI BOUCHERIE
195, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

தமிழ்ச்சோலை -பாரிஸ் 17

Gooday
208, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

யாழ் இறைச்சிக்கடை
6, Rue Perdonnet - 75010 PARIS

SACHI EDUCATION
70, rue Philippe de Girard - 75018 PARIS

NRS COIFFURE
5B, Av. Alexis Varagne - 95 Villiers le Bel

ராக ஜோதி மளிகை
C.C Pte de la Ville - 95140 Garges Les Gonesse.

மாயவர் - மொழிபெயர்ப்பு
7, Rue Perdonnet (M°: La Chapelle)

MGR VIDEO
5, Rue Perdonnet - 75010 Paris

தமிழாலயம்
19, Rue Cail, 75010 Paris

மாலா மளிகை
4, Place de Salengro - Garges les Gonesse

அறிவாலயம் புத்தகசாலை
7, Rue Perdonnet (M°: La Chapelle)

Karan Coiffure
203, Rue de Fbg St.Denis (M°: La Chapelle)

SHAEE CASH & CARRY
193, Rue de Fbg St.Denis (M°: La Chapelle)

RESTAURANT PARADISE
10, Av. Louis Aragon, Bobigny (M°: Bobigny)

ஞானமணி பல்பொருள் அங்காடி
218, Rue. Anatole Francy - 93 Drancy

அம்பாள் ஸ்ரோஸ்
192, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

தமிழ்ச்சோலை - தமிழ்ச்சங்கம்
Le Blanc Mesnil (93), Clichy (92)

அஷ்டலக்சுமி கோயில்
1, Rue Ledru Rollin - 94600 Choisy le Roi

Sagana Coiffure
64, Rue Louis Blanc (M°: La Chapelle)

கிருஷ்ணா அச்சகம்
73, Rue Doudeauville - 75018 Paris

GADS EXO
14, Bis, rue Emile zola 93400 St.Ouen
M°: Pte de St. Ouen)



தீவக செய்திகளை அறிய..
www. Allaiyoor.com







# விவசாயிகளின் கோபங்களுக்கு செவிசாய்ப்பது எனது கடமை

– அதிபர் பிரான்சுவா ஹொலந்

பிரான்ஸ் தலைநகர் பாரிசில் வருடா வருடம் நடைபெறும் விவசாயக் கண்காட்சி அண்மைக்காலங்களாக வருடத்துக்கு ஒரு முறை அரச தலைவர்களின் சம்பிரதாய வருகையை பதிவு செய்வதற்கும், அவர்கள் முன்னிலையில் விவசாயிகள் தங்கள் கோபங்களைக் கொட்டித் தீர்ப்பதற்குமான களமாகவுமான ஒரு நிகழ்வாக மாறிவருகின்றது. இவற்றையெல்லாம் விட நகரவாழ் மக்கள் தமக்கும் விவசாயிகளுக்கும் எந்தவொரு சம்பந்தமுமில்லை என்ற நிலையில் ஆடு, மாடுகளை வேடிக்கை பார்ப்பதுடன் கண்காட்சி முடிந்து விடுகிறது என விவசாயத் தொழிற்துறைச்சங்கம் கவலை தெரிவித்துள்ளது.

மாசி 27 முதல் பங்குனி 6 வரை இடம்பெற்ற 53 வது விவசாயக் கண்காட்சி கடந்த 20 வருடகாலக் கண்காட்சிகளில் மிகவும் சிக்கலான நிகழ்வாகப் பதிவாகியுள்ளது. திறப்பு விழாவிற்கு அதிபர் ஹொலந் அரங்கில் நுழைந்த ஒரு சில நிமிடங்களிலேயே எதிர்ப்பாளர்களால் கோஷங்கள் எழுப்பப்பட்டன. விவசாயிகள் இல்லையெனில் பிரான்ஸ் இல்லை என்ற கோஷத்துடன் ஆரம்பித்து ''Démission'', «Bon à rien», «Dégage» இன்னும் ''Nous ne somme pas des migrants» என வசை மொழிகளும் தொடர்ந்தன. விசில்சத்தங்களும், கூக்குரல்களும் கண்காட்சியாளர்களுடன் எந்தவொரு உரையாடல்களுக்கும் இடமளிக்காமல் அதி–பரை வெளியேறத்தள்ளியது.

பிரான்ஸ் விவசாயப்பெருமக்களின் உற்பத்திப் பொருட்களை சுவைத்துப் பார்த்து புன்முறுவல் செய்து கை கொடுத்து விலகுவது மட்டுமல்ல எனது கடமை. மாறாக அவர்களின் கோபங்களுக்குச் செவிசாய்ப்பதும் எனது கடமைதான் என ஊடகத்துறையினரால் நீட்டப்பட்ட பலநூறு ஒலிவாங்கிகளிற்கு அதிபர் பதிலளித்தார். மேலும் நான் இங்கு சுற்றிப்பார்த்து விட்டுச் செல்வதற்காக வரவில்லை. எமது விவசாயிகளுக்கு கை கொடுத்து உதவுவதற்கு ஓயாமல் உழைப்பேன் என நம்பிக்கை தெரிவிப்பதற்கும் தான் சமூகம் கொடுத்துள்ளேன் என மேலும் தெரிவித்தார்.

தற்போது விவசாயிகள் முன் வைக்கும் பல பிரச்சினைகள் தீவிர பரிசீலனையிலும், பேச்சுவார்த்தைகளிலும் உள்ளது. குறிப்பாக

- ✔ பிரான்ஸ் கால்நடை வளர்ப்பாளர்களில் 40 ஆயிரம் வளர்ப்பாளர்கள், ஐரோப்பாவின் மற்றைய நாட்டு வளர்ப்பாளர்களின் அதீத உற்பத்தியால் செய்வதறியாது அரச உதவியை நாடிக்காத்திருக்கின்றனர்.
- ✔ பெரு விநியோக கொள்வனவாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் இடையிலான ஆரம்ப விலைத் தீர்மானிப்பு தொடர் சட்டமூல மாற்றம் தொடர்பான விவாதங்கள் என அதிபர் குறிப்பிட்டுள்ளார்.






## 2016 விவசாயக்கண்காட்சியின் முகம் !

விவசாயக்கண்காட்சியில் அதிபர் பிரான்சுவா ஹொலந்த் மனுவல் வால்ஸ் இற்கு இணையான இன்னுமொரு VIP என்றால் 'Cerise' தான். அரசதலைவர்களை சுற்றி நின்று புகைப்படம் எடுத்தவர்களை விட Cerise உடன் நின்று செல்பி எடுத்தவர்களே அதிகம்.

Cerise இந்த வருடத்திற்கான விவசாயக்கண்காட்சி "முகம்" ஆகும். இவ்வாறு ஒவ்வொரு வருடமும் அந்தவருட சிறந்த மாடு முகமாவது வழக்கம். இன்று 8 வயதாகும் Cerise, bazadaise இனத்தைச் சேர்ந்தவள். 750 கிலோகிராம் நிறையுள்ள Cerise ஐ இறைச்சிக் கடைக்கு அனுப்பக்கூடாது என பல ஆயிரம் கையெழுத்துகளுடன் மனு Cerise ன் வளர்ப்பாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அவர்களும் அம்மனுவைக் கவனத்தில் எடுத்து Cerise ஐ நாங்கள் இறைச்சிக்கு அனுப்பப் போவதில்லை எனவும், அவள் இயற்கை மரணம் எய்தும் வரை கன்றுகள் ஈனுபவளாக தொடர்வாள் எனவும் குறிப்பிட்டுள்ளனர். Cerise க்கு இதுவரை 6 கன்றுகள் உள்ளது என்பதும், பிரான்சின் bazadaise இன் அழகு ஆரோக்கிய மாடுகளுக்கான போட்டியில் சாம்பியன் பட்டம் வென்றதும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

விவசாயிகளின் இடர்களை நாம் நன்கு உணர்கிறோம். அவற்றிற்கான தீர்வுகளை முன்வைக்கவும் முயன்று வருகிறோம். இருப்பினும் ஒரு நாட்டின் அதிபரை ஏக வசனம் பேசி, விசிலடித்து அவமானப்படுத்தியதை ஏற்றுக் கொள்ள முடியாது என விவசாயத்துறை அமைச்சர் Stéphane Le Foll தனது கண்டனத்தை தெரிவித்துள்ளார்.







ஒரு விவசாயக்கண்காட்சியில் இத்தகைய முறையில் எதிர்ப்புகளைப் பதிவு செய்யும் செயற்பாடுகள் என்பது இது ஒன்றும் முதற்தடவையல்ல. 2001ல் அப்போதைய பிரதமர் Lionel Jospin வருகை தந்தபோது அதிபர் ஹொலந்தை விட பல மடங்கு அதிகமாக அவமானப்படுத்தப்பட்டு வெளியேற்றப்பட்டுள்ளார் என்பதும் 2008ல் அப்போதைய பிரான்ஸ் அதிபர் நிக்கோலா சார்க்கோசிக்கு எதிராக எதிர்த்து நின்றவர்களை சார்க்கோசி «Casse toi Pauvre con» என அவமானப்படுத்தி அனுப்பியதும் வரலாறு தான்.

அதிபரை நோக்கிய ஒரு சாராரின் எதிர்ப்பு பலமாகப்பதிவு செய்யப்பட்ட போதும் மற்றைய கண்காட்சியாளர்களால் அதிபரின் வருகை பெரிதும் வரவேற்கப்பட்டுள்ளது. இந்த வருடம் கடந்த ஆண்டுகளை விட பலமடங்கு குறைவான வருகையாளர்களே (611000 பேர்) பதிவாகியுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். இவ்வரவு 2014ல் 703000 பேராகவும், 2015ல் 691000 பேராகவும் இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

•